காஞ்சி
கண்ட



கருத்தரங்கி
மாட்சி

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ண

தி.மு.க. வார வெளியீடு.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 | வெள்ளி 23-6-61 | கதிர்- 16

காஞ்சியிலே கூடினோம்! கருத்துக்களைப்
பரிமாறினோம்!!—இது அரசியல் இயக்கத்தில்
இல்லாதபுதுமை—நமது அண்ணனின் சனநாயக
உள்ளத்துக் கோர் சான்று!

சலசலப்புச் சர்ப்பங்கள், சாக்கடைப்பேச்சினர்,
வல்லடியினர், வம்பர், சுயநலமிகள்,—சூழ்ந்திடும்
பொதுவாழ்வில், களங்கமற்று நாமிருப்போம்! கடமை
முடிப்போம்! அன்பு வளர்ப்போம்!!

இன்று இருப்போரை நாளைக்காண இயலாஉலகில்,
பண்பிலா பழிநமக்குவேண்டாம்!—பழகுவோம்
அன்புடன். பாசத்துடன் எடுத்துரைப்போம் கொள்கையை.
பழந்தமிழ் வள்ளுவர் வகுத்தஅறநெறி இதுதான்!!

பணபலமிக்கோர், பூர்ஷ்வாக்கள், பத்திரிகைகள்—
இவ்விதம் பல்முனைஎதிர்ப்பு—எனினும் என்ன!
மக்கள் மாமன்றத்தின்மதிப்பும் பெருமையும்
அடைந்திடின், தூசன்றோயாவும், தும்பையானநமக்கு?

வருகிறது தேர்தல்! வாய்வீச்சுபோதாது—
ஓட்டுகளைக்குவிக்கும் உள்ளம் வேண்டும்—
உழைப்புவேண்டும்—பழக்கம் பெறல்வேண்டும்—
இப்போதே, நாம் ஈடுபடவேண்டும்!!

கேலிசெய்வோர்நாண, கேடுபுரிவோர் தலைகுனிய
கிடைத்தவழியெல்லபம், கிளைக்கழகத் தோழர்காள்!
அன்பால் மக்களின் ஆதரவினைப் பெற—
அனுதினமும் ஆற்றுவீர் பணி! பணி!! பணி!!!

ஈச்மென்

தோழர்காள்!

“அறப்போரில்” நீங்கள் படித்துவரும் கொடுங்கோலன் ஈச்மென் மீது இஸ்ரேலியத் தலைநகரமான ஜெருசலேத்தில் ஒன்பது வாரங்களாக நடைபெற்று வரும் வழக்கில், ஜூன் 20–ந்தேதி வாக்குமூலம் வாங்கப்பட்டது. பைபிளை வைத்துச் சத்தியம் செய்யும்படி கோர்ட்டார் கூறியதற்கு மறுத்துவிட்டான். யூதர்களைக் கொன்றதற்கு நான் காரணமல்ல, ஹிட்லரும், ஹிம்ளரும்தான் என்றான்.

—*— —0— —*—

காஞ்சியில் கண்ட காட்சி!

அன்பும் பண்பும் தவழ்ந்த அருமை! நமக்கேயுள்ள பெருமை!!

“மல்லிகைப் பூ விற்பவன் ஊமையனாக இருப்பினும் சரியே. ஆனால், இசை மேதையே ஆனாலும் எருக்க மலரை விற்பதில் இலாபம் என்ன ?”

இப்படிக்கேட்ட அறிஞர் அண்ணா அவர்கள், விடுதலை உணர்வு எனும் மல்லிகைப் பூமணத்தை நாடுநெடுகிலும் பரப்பிவரும் கழகத் தோழர்கள் அனைவரும் ஊமையர்கள் அல்லர் எனத்தெரிந்துகொண்டபின்னரே கேட்டார். எருக்க மலரை விலைகூறி விற்போர் எப்படிப்போனாலும் போகட்டும் மல்லிகைப் பூவை மணம்பரப்புவதற்கல்லாமல், காசாக்கத் துடிக்காத கழகத் தோழர்கள் காஞ்சியில் அணிவகுத்து உரையாடிய காதை சுவை நிரம்பியது; இந்த நாட்டுச் சரித்தி . தில் இணைகாணமுடியாதது.

அன்பின் சிகரத்தை, அறிவின் ஆழத்தை எப்படியும் கண்டுவிடத் துடிதுடித்து மனிதனின் காலடிபட்ட அன்றைய உலகப் பரப்பின் மூலை முடுக்குகளிலுமிருந்து சாரை சாரையாகப் பவுத்த மடாலயங்களில் குழுமி மகிழக் காஞ்சி நோக்கி மனிதக் கூட்டம் ஊர்ந்து வந்தகாலமும் ஒன்றிருந்தது. அப்படி வந்தவர்கள் எதனைப்பெற்றுப் போனார்கள் என்பதைச் சரியாகச் சொல்லத் தற்போது தடயமில்லை. ஆனால், இந்தத் திங்கள் 17 18 ஆம் நாட்களில்காஞ்சி நோக்கிப் படைதிரண்ட திருவிடத்தின் விடுதலைச் சேனாதிபதிகள்-அடிமை விலங்கொடிக்க ஆங்காங்குப் படைதிரட்டும் ஆற்றல் மறவர்-எதனைப் பெற்று வீடு திரும்பினர், எதனைக் கற்று மனத்தில் பதிய வைத்தனர் என்பதை இந்த நாட்டின் எதிர்கால வரலாறு சொல்லும் :

வந்திருந்த ஆயிரம் பேரும் ஆயிரம் வாழ்க்கை முறைகளை வயிற்றுப்பாடாகக் கொண்டிருந்தவர்கள். அன்று பொங்க வேண்டிய சோற்றுக்காக கோழி கூவுகையிலேயே எழுந்துப் பொருள்சேர்க்கப் புறப்படுவோர் அவர்களில் அநேகர். ஆலைச்சங்காலேயே காலத்தை அளக்கும் வாழ்வுபெற்றோர் அநேகர். பெற்றகடனை மொத்தமாகக் கொடுத்துவிட்டு முதல்தேதி எப்படியும் முழு வயிறு உண்போம் எனக் காலண்டரைப் பார்த்துப் பசியாறும் குமாஸ்தாக்கள் அநேகர். நெய்து துணியைக் காட்டிக்காட்டி நெடுமூச்செறிந்துக் கடைகளின் படியேறி வாங்குவோரைக் காணாமல் காலுடைந்து போயிருக்கும் நெசவாளிகள் அநேகர். சிறுகடை நடத்துவோர், தெருவில் கூவி விற்போர், கல்லுடைப்போர், களம் பெருக்குவோர், ஒரு டஜன் மக்களை பெற்றும் ஒரு டஜன் மாடு வாங்க முடியாதுதவிக்கும் உழவர் பெருமக்கள்-எல்லாப் பிரிவினரும் வந்திருந்தனர்.

இவைபோல், பலபடியான வாழ்க்கை முறைகளைக் கொண்டிருப்பினும், ஒருபடியான குறிக்கோளைக் கொண்டியங்க உறுதி பூண்டுவிட்டவர்கள் அவர்கள். ஆயிரம் வண்ணத்தை அள்ளிச் சொரிந்து ஒரே தோட்டத்தில் ஒளி முகங்காட்டும் பனிமலர்கள் அவர்கள். வருவது வரட்டும் எனத் துணிந்து விட்டார்கள் அவர்கள். செய்யவேண்டியவை என்பதில் அசாத்தியத் தெளிவு அவர்களுக்குண்டு. வாழ்க்கையைக் காதலித்துக்கொண்டே சாவினையும் புன்முறுவல்பூக்க வரவேற்கும் பண்பினைப் பழகிக்கொண்டவர்கள். பட்டமரமாகிப்போன இந்த நாட்டுச் சமுதாயத்தை பார்த்துப் பார்த்துக் கண்ணீர் உகுத்துக் கொண்டே, என்றைக்காவது ஓர் நாளில் வசந்தம் வந்தே தீரும் என்பதில் தளராத நம்பிக்கை கொண்டு காத்திருப்பவர்கள். தடைக்கற்களை-தடுக்கும் மலைகளை அவர்கள் சந்திக்காதநாளே கிடையாது. ஆனால், அந்தத் தடைக்கற்கள் வளரமாட்டா. அந்த மலைகள் அதிக உயரம் ஆகமாட்டா. அவர்கள் வளர்வார்கள். அவர்கள் சந்ததி வளரும்-தொடரும். பத்துப்பேராகப் பத்தாண்டுகளுக்குமுன் இருந்த அமைப்பின் அங்கமான அவர்கள், ஆயிரம் பேராக ஆகியிருப்பதைக் கண்டபிறகும் தங்களது வளர்ச்சியில் சந்தேகம் கொள்வதற்கு ஆயிரம்பேரில் ஒருவர்க்குக்கூட துணிவிருந்திருக்காது. ஏர்பிடித்துழும்போதும், இயந்திரத்தில் கண்ணாக இருக்கும்போதும், போர்ப்பரணி கேட்கக்கூடுமென காதைத் திருப்பிவைத்துக் காத்திருக்கும் மறவர் கூட்டம் அது. அண்ணா அவர்கள் காஞ்சி வாருங்கள்; கலந்துரையாடுவோம் எனக் குரல்கொடுத்ததும் புனித யாத்திரைப் போகும் திருப்தியில் புறப்பட்டு வந்துவிட்டனர். அவர்கள் தங்களை எந்தப் பெயரிட்டும் அழைத்துக்கொள்ளவில்லையானாலும், “கொள்கை பரப்புவோர்” என்ற பெயர்சூட்டி மகிழ்ந்தார் அறிஞர் அண்ணா. இந்தப் பெயர் அவர்களுக்கு முற்றும் பொருந்தும். எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கும் எந்த சாசனங்களையும் அவர்கள் மொழிபெயர்த்துச் சொல்லவில்லை. பத்துக் கட்டளைகள், பதினைந்து கோட்பாடுகள் என வரையறுத்து வகுத்துக்கொண்டு நாள்தோறும் மக்களைச் சந்திப்பதில்லை அவர்கள். தெருவோரத்துப் பாமர மக்களின் குரலை எதிரொலிப்பது

(11-ம் பக்கம் பார்க்க)

ஜூலை
13, 14, 15, 16
மதுரை மாநாடு
வாரீர்!



இருபக்கமும் சவுக்குக் காடு! பாதையோ, கரடுமுரடு. கப்பிப் போட்டு, அப்போதுதான் பரப்பியிருந்ததால், காரை வேகமாக விடச்சொல்லவும் வழியில்லை. பதினைந்து இருபது பேரிருக்கும். பலசாலியான ஆட்கள். உழைத்து உரமேறிய உடல் கொண்டோர். சவுக்குத் தோப்புக்குள்ளிருந்து நிறுத்து! நிறுத்து!' என்று கையைத்தட்டிக்கொண்டு கூச்சல் போட்டவண்ணம், ஓடி வருகிறார்கள். என் கூட இருப்பதோ "ஹோம்லேண்ட்" ஆங்கில ஏட்டில் பணியாற்றும் தோழர் கிள்ளிவளவன், ஒருவர்தான்! என்னை அவர் பார்க்கிறார். அவரை நான் பார்க்கிறேன். தனி இடம். அடித்துப்போட்டால் நாதியில்லை, கேட்க. அகமகிழ்ச்சியுடன் நானும் அவரும் காஞ்சி 'கருத்தரங்கில்' கலந்துகொண்டு' சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பாதைதான், வழக்கமாக. அண்ணா வந்து போகும் பாதை. மக்கள் சந்தடி அதிகமிருக்காது. நாங்கள் வந்த வேளை, நண்பகல்தான். இரவு பகலா பார்க்கிறார்கள், அரசியல் எதிரிகள்! எரிச்சலின் விளைவு, எதையும் செய்யத் தூண்டுகிறதே, அந்த ஓரிரு நிமிடங்களில், என்மனதில் ஓராயிரம் எண்ணங்கள் மின்னிவிட்டன. 'ஓட்டு! ஓட்டு! என்று, அவசரப்படுத்தினேன், டிரைவரை, வண்டி தாண்டவும், வந்தவர்கள் நெருங்கவும் சரியாக இருந்தது. உங்களிடம் சொல்லஉண்மையிலேயே வெட்கப்படுகிறேன், சகோதரர்களே! ஓடிவந்த அந்த உழைப்பாளர்கள், தாண்டும் வண்டியைக் கண்டதும் என்ன செய்தார்கள் தெரியுமா? வணக்கம்! வணக்கம்!! என்று கத்தினார்கள். கையெடுத்துக் கும்பிட்டார்கள், வாழ்க அண்ணா! என்று கூவினார்கள். கப்பிபோட்டு விட்டு, ஓய்வுக்காக, உள்ளே தோப்பில் உட்கார்ந்திருந்தவர்களை, காரின் முன்னர் பறந்துகொண்டிருந்த வண்ணக் கொடி, கவர்ந்திருக்கிறது. கழகத்தவர் யாரோ போகிறார்— கண்டு நாம் மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவிப்போம்— என்று நிறுத்தச் சொல்லி, கையிலிருந்தமண்வெட்டியோடும் கூடைகளோடு சிலரும், ஓட்டமாக ஓடிவந்திருக்கிறார்கள். அதிலே ஒரு பெரியவர்-வயது 50க்கு மேலிருக்கும்- உடையும் உருவும் அவர் ஒரு ஆதித்திராவிடப் பெரியவர் என்றே காட்டிற்று — அவரும் கூவினார் அண்ணா வாழ்க, என்று. இன்னும் அந்தப் பெரியவர், என் கண்ணெதிரிலேயே நிற்கிறார்! கையைக் கூப்பி, அவர் கூவிய தன் சிறப்பைக் கருத்துள்ளோரே உணரமுடியும்!!

தந்தை வயதுள்ளவர், நமக்கு அவருக்குத்தான், கழகத்தின் மீது, எத்தனை ஆர்வம்? அவர் கூட வந்த இளைஞர்களுக்கு, எவ்வளவு ஆசையிருந்தால், ஓடிவந்திருக்கவேண்டும்? இப்பேற்பட்ட உத்தமர்களை, நமது கழகத்தின் பால் அன்புகொண்ட உழைப்பாளிகளை, நமது பணியால் நாடு வாழும் என்கிற நம்பிக்கையோடு இருப்பவர்களை, பலமிக்க உருவையும் ஓடிவந்த வேகத்தையும்

அரங்கண்ணல்

வைத்து "தப்புக் கணக்கு" போட்டமைக்காக மனம் நொந்தேன்! வேதனைப் பட்டேன்!! சில நிமிட நிகழ்ச்சியேயானாலும், இது என் உள்ளத்தை உறுத்தியது மட்டுமல்ல, நாட்டின் இருதயத்தில் நமது கழகமும் அண்ணாவும் பெற்றிருக்கும் "இடத்தினை" உணர்த்தியதோடு மட்டுமின்றி' அவசரத்தால் எவ்வளவு சீக்கிரம் 'தப்புக்கணக்கு'போட்டுவிடுகிறது மனிதமனம், என்கிற உண்மையையும் எடுத்துக் காட்டிற்று. தெரிந்த இடங்களிலே, நமது கழகத்தின் வளர்ச்சியை வைத்து, நாம் மகிழ்கிறோம்! அறிமுகமில்லாத ஊர்களிலும், இடங்களிலும், வழிகளிலும்கூட ஆதரவாளர்களும், நம்பிக்கைகொண்டவர்களும் இருப்பதை நாம் அதிகமாக எண்ணுவதில்லை! அப்படிப்பட்டவர்கள், முறையோடு கழகத்தில் உறுப்பினராகாமலிருக்கலாம். ஆனால், அவர்தம் மனதிலெல்லாம், 'தி. மு. க. என்று ஒரு கட்சியிருக்கிறது. அது நம்மைப்போன்ற ஏழையர் கழகம். அதற்கொரு வழிகாட்டியிருக்கிறார். அண்ணா என்னும் அந்த நல்லவரை நாம் வாழ்க என்று சொல்ல வேண்டும்," என்கிற இதய உணர்வு மலந்திருப்பதை, எண்ணிடும்போது, உண்மையில் நமது வளர்ச்சியும் எழுச்சியும் புரியும்! இதை உணர்ந்திடின், எனக்கு ஏற்பட்டதுபோல, எதைக் கண்டாலும் உண்டாகிற பரபரப்பும்பதைபதைப்பும்நிச்சயம் நமக்கு எழாது!!

எதையும் நிதானித்து, ஏன், எப்படி, முடியுமா, ஆகுமா என்று யோசித்திடும் மனப்பக்குவம் ஏற்பட்டுவிடின், நமது தோழர்களில் பலருக்கும் பழுதையைப் பாம்பென்றும், மண்கட்டியை மகாமேரு மலை என்றும் நினைத்திடும் நெஞ்சம் மறையும்! நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, இதெல்லாம் நெறிஞ்சி-- முள்—எம்மாத்திரம் எமக்கு, எனும் அலட்சியம் ஏற்படும்!!

* * *

அந்த வழியாக வரும்போது தாம்பரத்திலிருந்து, சைதாப்பேட்டை வரையில்ரோட்டின் இருமருங்கிலும் காங்கிரசின் கொடிகள் கட்டப்பட்டிருந்தன—சில இடங்களில் இரண்டு மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன— பல்லாவரம், சைதை போன்ற இடங்களில் அலங்காரமான மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன—அன்பர் காமராசரும், அளகேசன் அவர்களும், அன்றைய தினம் அந்த இடங்களுக்கெல்லாம் 'விஜயம்' செய்வதாகச் சொன்னார்கள். நண்பர் கிள்ளிவளவன்கூட, 'பாருங்க சார்! நாம் ஒரு தோரணம் கட்டினால் நடுரோட்டில் ஏன் கட்டுறீங்க, என்று சண்டைக்கு வருகிறார்கள் அதிகாரிகள். காங்கிரசுக்காரர்களுக்கு மட்டும் பார்த்தீர்களா, சலுகை காட்டுவதை?" என்று குமுறினார். ஒரு கழகத் தோழரை விட்டு, ஆங்காங்கும் அன்றைய தினம் எப்படி நடக்கிறது "இருவர் விஜய நிகழ்ச்சிகள்' என்று கண்டுவந்து சொல்லுமாறு ஏற்பாடு செய்தேன்.

ஒவ்வொரு இடத்திலும் ஐந்து அல்லது பத்து நிமிட நேரம் பேசினார்களாம் இருவரும்! கூடியிருந்தோரை எண்ணிட இரண்டு கை விரல்கள் போதுமாம்!! கட்டப்பட்டிருந்த கொடிகளுக்கிடையில் ரோடு ஓரம், இரண்டு மூன்றிடங்களில் தோழர் சம்பத்துடைய கட்சிக் கொடியும் இருந்தது. அன்றைய தினம் தோண்டிக் கட்டப்பட்ட அறிகுறியும் தெரிந்தது. ஓரிரு இடங்களில் அய்யாவுடைய கொடியும் இருந்தது. இரண்டையும் காங்கிரஸ் தோழர்கள்தான் கட்டியிருக்க வேண்டும்! அப்படிக் கட்டுவதால், அக்கட்சிகளுக்குக் காங்கிரசார் ஆதரவு சேர்க்கிறார்கள் என்றல்ல பொருள். நம்மை எதிர்க்க அவைகள் இருப்பதை, மக்களுக்குச் சொல்லி, அந்தக் கட்சிகளும் நம்முடைய கொள்கையை எதிர்க்கின்றன, என்று குறிப்பிடும் ஆசைதான்: வேறென்ன!!

இந்த ஆசை தேர்தல் நெருங்குவதால் படிப்படியாக அதிகமாகிக் கொண்டே போகும். திருவாளர் காமராசர் அவர்கள் தேர்தலுக்கு யாரைப் போடுவது என்பதைக் காண்பதற்காகத் தமிழ்நாட்டின் பல பாகங்களுக்கும் இப்போது மின்னல் வேகப் பயணம் நடத்திவருகிறார். தேர்தல் டிக்கட்டுக்கு மனுப்போட்டிருக்கிற ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொகுதியிலும் தாங்கள் செய்து வைத்திருக்கிற ஏற்பாடுகளைக் காட்டிட, கொடிகளைக் கட்டுவார்கள், புதிய புதிய கிளைகளைக் கூட்டுவார்கள். பூமாலைகளைப் பல துணைச் சங்கங்களின் பெயர்களைச் சொல்லி மலைபோல் குவிப்பார்கள், அதோடு தி. மு. க. வைத் திட்ட அவரை அழைத்துக் கூட்டம் போட்டோம் இவரைக் கூப்பிட இருக்கிறோம் என்கிற பட்டியலையும் நீட்டுவார்கள். தி.மு.க. வைத் திட்ட அழைக்கப்படும் ஆட்களின் பட்டியலில் முன்பு அய்யா அவர்கள் பெயர் மட்டுமே இருந்தது. இப்போது அவருடைய திருமகனாரின் திருப் பெயரும் சேர்க்கப் பட்டிருக்கிறது! எங்கெங்கு தேசியத் தமிழ்க் கட்சி என்பதில்லையோ அங்கெல்லாம் காங்கிரசாரே முன்னின்று துவக்கச் செய்வார்கள். அதன் மூலம் தேர்தலில், தி. மு. க. வைத் தாக்க ஏற்பாடு செய்வார்கள்!!

தன்னைப் பற்றி எடுத்துச் சொல்ல ஆட்களைப் பிடிக்க வேண்டிய அளவுக்கு ஒரு மாபெரும் விடுதலை இயக்கமான காங்கிரசுக்கு ஏற்பட்ட "கதி" பரிதாபத்துக்குரியதே!! உலகம் போற்றும் பண்டித நேரு இருந்தும், அவர் புகழ்பாட பத்திரிகைகள் பல இருந்தும், பண பலம் ஏராளமி

இன்பநிதி பெறுவோம்!

ருந்தும், ஆட்சி அதிகாரம் கைவசமிருந்தும், பதினுன்கு ஆண்டுகளுக்குமேல் நாட்டைப் பரிபாலனம் செய்த லட்சணத்தில் இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது, காங்கிரசுக்கு!!

எலிகளென்று முன்பு ஏசப்பட்டோர் புலிகளாக்கப்படுகிருர்கள். பூனைகளென்று தூற்றப்பட்டோர் யானைகள் என்று போற்றப்படுகிருர்கள். எவையெவை அவர்களுடைய தீயகுணங்களென்று வர்ணிக்கப்பட்டதோ, அவையெல்லாம் திருக்கல்யாண குணங்களென்று பாராயணம் செய்யப்படுகின்றன. போட்டிக்குச் செல்லும் 'வஸ்தாது'க்குத் தயார் தீனி போடுவதுபோல, இன்றைய தமிழ் நாட்டுக் காங்கிரஸ், தேர்தல் பிரச்சாரத்திற்கு யாரைப் பிடிக்கலாம்—எப்படிப் பிடிக்கலாம்—எதைக்கொண்டு பிடிக்கலாம் என்று வேட்டையாடுகிறது! எதிர்பாராமல் இப்போது அவர்களுக்கு தோழர் சம்பத் கிடைத்திருக்கிருர். விடுவார்களா ஒரு 'ரவுண்டு' வரவே சொல்வார்கள்!!

இதுநாள்வரை நம்மிடம இருந்தவர்கள், நமது இல்லம் நாடி வந்து உண்டு உறங்கி மகிழ்ந்தவர்கள், நம்முடைய அண்ணன் தம்பிகள் என்று சொல்லிக் கொண்டவர்கள், செல்வாக்கு எனும் சிங்காரியைப் பெற செல்லக்கூடாத வழியெல்லாம் செல்லும் நேரம் இது! சிங்காரியோ—பூக்காரியோ—வேலைக்காரியோ—சேலைக்காரியோ - தி. மு. கவை நன்ருகத்திட்ட ஆள் கிடைத்த வரையில் நமக்கு இலாபம் என்று காங்கிரஸ் எண்ணும் கட்டம்!! எனவே ஆங்காங்கே, சம்பத்துக்குச் சகலவிதமான மரியாதைகளுடனும் கூட்டங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்! போலீஸ் பாரா-புதுவிதமான மரியாதைகள் கூடச் செய்தளிக்கப்கப்படும்! இந்தக் கோலாகலங்களையும் "அண்ணுதுரையா? அவருக்கு என்ன தெரியும்! தி. மு. கவா, அது ஒரு செருப்பாளர்கழகம்!! திராவிடநாடு, அதை நம்பிடின் சுடுகாடுதான்" என்று தோழர் சம்பத், "சலாம் வரிசை" எடுக்கும் வேகத்தையும் காணும் போது, நமது தோழர்களிலே சிலருக்கு கோபம் வரும். சோகமும் வரும். புதுக்கோலம் பூணக்கூடிடுவோரைக் கண்டு, நான் போட்டதுபோல, 'தப்புக்கணக்கு'ப் போட்டு, மன வேதனைப்படும் கட்டங்களும் வரலாம்!! மனிதர்களுடைய மனம் மென்மையானது! அதிலும் ஏழைகளாகிய நம்முடைய உள்ளம் மிக மிக மென்மையானது!! நாம் பாடுபடும் லட்சியத்தின் மீது' நமக்குள்ள ஆசை, மிகப் பெரிது, அது சீக்கிரம் சிந்திக்க வேண்டும் என்பதில் நாம் கொண்டுள்ள அவசரமும் ஆர்வமுமோ, இன்னும் பெரிது. இதனுல், புகழ்பெற்ற ஒரு ஆள், நமது கழகத்தில் சேர்ந்தால், காணுத வெற்றியெனக் களிக்கிறோம், புகழ்பெற்ற ஒருநபர், நம்மை விட்டுப் போய்விட்டால், கூனிக் குறுகி, குமுறுகிறோம். இந்த இரண்டுக்கும் காரணம், கழகத்தின் மீது, நமக்குள்ளபற்றுப்பாசமும்தான். ஐயோ! இப்படிச் சொல்கிருரே—இவருக்கு இந்த ஊரில் கூட்டம் நடத்த ஆள் கிடைத்து விட்டார்களே - இப்படியிப்படி நம்மைத் திட்டிப் பேசுகிருர்களே— எதிர்க் கட்சியினர் நம்மை எகத்தாளம் செய்கிருர்களே-இந்த ஆளின் போக்கால் கழகவளர்ச்சியின் முன்னேற்றம் தடைப்படுமோ-என்கிறஆத்திரம் கழகத்தை நம்பிடும் ஏழைகளாகிய நமக்குவரத்தான் செய்யும். ஆனுல் சத்தத்தோடு வருகிறது என்பதற்காக' எப்படி ஏப்பம் விட்டான் தெரியுமா என்று யாரும் பாராட்டுவதில்லை! மெதுவாக வந்தாலும், அறிவுமணம் கமழ்ந்திடின்-எப்படிப் பேசினுர் தெரியுமா-என்றே மக்கள் சொல்வார்கள்!!

அப்படிப்பேசக்கூடியவர்களில் போனவர்கள் எத்தனை பேர்? போகபோக்கியங்களில் புரளும் காங்கிரசுக் கட்சியில் பேசக்கூடியவர்கள் எத்தனைபேர்? ஏனைய கட்சிகளில் இருப்போர் எத்தனை பேர்? திராவிட முன்னேற்றக் கழகத்திலிருப்போர் எத்தனை பேர்? என்று ஒருகணம் சிந்தித்தால், நமக்கேற்படும் அவசரமும் ஆத்திரமும் குறையும்! அப்படி எத்தனை பேர் இருக்கிருர்கள் என்பதையே காஞ்சிபுரத்தில் அண்ணு கூட்டிய 'கருத்தரங்கு'விளக்கியது. ஆயிரத்துக்கும் மேலான பேச்சாளர்கள் இருக்கும் கழகம் நம்முடையது!! அதிலும் பல பேருக்கு அழைப்புகள், விடுபட்டுப் போய் விட்டனவாம். இருந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர், வந்திருந்தனர். "ஆயிரம்பேரா? செச்சே! அவ்வளவு பேச்சாளர்களா இருப்பார்கள்?" என்று ஐயப்படலாம். இவர்களெல்லாம் வேடிக்கை பார்க்க வந்தவர்களாகயிருக்கும் என்றே முதலில் நான்கூட எண்ணினேன். ஆனுல் ஒவ்வொருவரையும் சந்தித்தபோது, "இவர் அங்கே பேசினவராயிற்றே? இவரை இந்த மேடையில் பார்த்தோமே!" என்கிறநினைவு வந்தது ஒவ்வொரு மாவட்டமாக உட்கார்ந்திருந்தோரைக் கண்ட போது, உண்மையில் நெஞ்சு பூரித்தது. கழகக் கொள்கையை எடுத்துச் சொல்ல இத்தனை பேர் இருக்கிருர்கள்! பேச்சாளர்கள் வேண்டுமென்று அலைகிறது பெரியகட்சியான காங்கிரஸ்-நம்மிடமோ ஆயிரக்கணக்கிலிருக்கிருர்கள், பேச்சாளர்கள்!! பேச எழுந்து, காலாட மெய்சிலிர்க்க உட்காருவோருண்டு — இரண்டு வார்த்தைகளைத் திக்கித் திணறி உளறிவிட்டு வியர்வை சொட்டச் சொட்ட அமர்ந்திடுவோருண்டு— 'மகாஜனங்களே! இப்போ! இப்போ! என்று எழுதி மனம் செய்தது மறந்துபோன காரணத்தால் எதுவும் பேசமுடியாது தவிப்போருண்டு. மேடைப் பேச்சு என்பது எளிதல்ல! மேடையிலே ஏறி, எண்ணியதைப் பேசத் துணிச்சல் இருந்துவிட்டால் மட்டும் போதாது. சொல்லப்போகிற கருத்தில் தெளிவும் வேண்டும். துணிச்சல், தெளிவு இரண்டு மட்டும் இருந்தால் போதுமா? இல்லை! திறமையும் தேவை, இனியவைக் கூறிக் கவர. இத்தனையும் வரப்பெற்ற பேச்சாளர்கள் இருக்கின்றனர், நம்மிடம்! கழகம் ஆரம்பித்தபோது இருந்த பேச்சாளர்களை எண்ணிவிடலாம்--இப்போதோ, அடடா ஒரு மாவட்டச் சார்பிலும் நடைபெற்ற ஆய்வாளர் கூட்டத்தில் ஒவ்வொரு தோழரும் கழக சம்பந்தமானப் பிரச்னைகளை அலசிப்பேசி ஆராய்ந்தவிதம், அகமகிழக்கூடிய ஒன்று! பார்த்துக் களிக்கக் கூடிய காட்சி! பரவசப்படவேண்டிய நிகழ்ச்சி!!

அகமும் புறமும் அள்ளும் குறளும் சிலம்பும் மேகலையும் படித்துப் புலவர்களானவர்களல்ல, பலர். இருப்பினும் எங்கிருந்து தான், எழில் தமிழ்ப்பயின்றதோ, அவர்நா! செந்தமிழ் முழங்க, எவ்வளவு இனிமையுடன் பேசுகின்றனர்!! கொள்கையைச்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

எண்ணத்தின் பாசறைகள் என்றிருச்கும்
எழுச்சிமிக்க தலைவர்கள் முன்னுல் பேச்சு
வண்ணத்தின் புதுப்பூச்சில் ஒளியே இல்லா
வெறும்பேச்சு, குறைபேச்சுக் கும்பல் நம்மின்
கண்ணியத்தை, கடமையை, கட்டுப் பாட்டைக்
காய்ந்துவரும் செ. ற்களினுல் தூக்கம் காணும்
மண்ணெுத்த கனவினிலே கூட, என்ன
மனத்தாலே செய்திடத்தான் முடியும்? கூடும்?

வன்செயலாம், குறைமதியாம் செருப்பு வீச்சு
வளர்கதைகள் நம்மாலாம்! உண்மை இல்லா
மண்மனத்தார் கூற்றுக்கள் பொருளா பேசும்?
மலைவிளக்காம் புதுக்கட்சி! என்ருல் எங்கே
கண்ணெுத்த ஒளிவிரிப்பு! நம்மைத் திட்டிக்
கரடியாகப் பேசுகின்ருர் உயிரே இன்றி!
தன்னைத்தான் அறியாதார் பிறரை எங்கே
சரியாக அறியத்தான் முடியும்! விந்தை!

* * *

—குழந்தையரசன்

அறப்போர் வளர அன்புடன் சந்தா அனுப்பிய சகோதரர்களின் பெயர்களை கீழே தந்துள்ளோம்.

32. பிலோமின்தாசு, கொணலை.
33. சி. ரா. கிருட்டிணன், நரிப்பள்ளி.
34. வை. இராமசாமி, இலட்சுமபுரம்.
38. வெ. மாயன், மட்டங்கிபட்டி.
44. ஐ. நெடுமாறன், வ-கீரனூர்.
43. செயலாளர், தி. மு. க. வல்லம் அஞ்சல்.
44. மு இளம்வழுதி, சுண்டக்குடி.
45. வி. தண்டிராஜ், தோண்டி.
46. ஏ. அருணுசலம், பேராவூரணி.
47. வி. அருணுச்சலம், வாதலைக்காடு.
48. கோவிந்தராசு, பேராவூரணி.
49. வி. ரெங்கசாமி, மாவுடுகுறிச்சி.
50. என். இளங்கோவன், குருந்தம்பட்டு.
51. சீத்தாராமன், 2536603—எஸ். இ. பி. 56-ஏ. பி. ஒ.
52. சி. என். சீனிவாசன், சரகாயபேட்டை,
53. லா. ஆ, மாணிக்கம், ஆண்டிமடம்,
54. சதாசிவம் பாமா, புளியம் தளம்.
55. எம். சுப்பிரமணியன், பெருமாள்பட்டி.
56. அ. சுந்திரபோசு, தூத்துக்குடி.
57. சி. பா. கருணுநிதி, சின்னப்பட்டி,
58. ஏ. சிதம்பரம், பெருவளப்பூர்.
59. இரா. கரிகாலன், முதுவாசிப்பட்டி.
60. வள்ளுவர் தமிழ் மன்றம், லாலாபேட்டை.
61. செயலாளர், தி. மு. க, சீராப்பள்ளி.
62. க. திருமாறன், தி. மு. க. செயலாளர், பட்டிவீரன்பட்டி.
63. செயலாளர், அண்ணு மன்றம், வள்ளப்பள்ளம்.
64. டி. தேவேந்திரன், மதுரை.
65. வன்னியன், மதுரை-1.
66. எஸ். கண்ணன், மதுரை-1.
67. சி. சிதம்பர முருகேசன், வடிவீஸ்புரம்.
68. த. நெடுமாறன், குமுடிமூலை.
69. வி. சந்திரசேகரன், மேட்டுப்பாளையம்.
70. எம். சி. ரெங்கசாமி, ரெட்ஹில்ஸ்.
71. எஸ். செல்லப்பன், ஆண்டிப்பாறை.
72. செயலாளர், தி. மு. க. மணமேல்குடி.
73. ஈ. வி. எம். தங்கராசன், விளாம்பட்டி.

துப்பறிவதில் பெயர் பெற்றவர் துரைசிங்கம். சற்றேறக்குறைய அருமை நாயகம் வயதுதான் அவருக்கும் இருக்கும். குடும்பம், மனைவி, மக்கள் என்கிற அக்கு தொக்கு இல்லாதவர். முதலில் அவர் போலீஸ் இலாகாவில் உத்தியோகத்திலிருந்தாரென்றும், ஓய்வு பெற்றபின் பொழுதுபோக்காக, போலீசுக்கு உதவும் வகையில் துப்பறிதலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்ததாகவும் சொல்லுவார்கள். எங்களூருக்கருகிலிருந்த ஒரு மலைச்சாரலில் தனி வீடு கட்டிக்கொண்டு, அவர் வாழ்ந்தார். யாரிடமும் அதிகம் பேசமாட்டார். எப்படி வாழ்ந்தார் என்பதே ஒரு துப்பறியக்கூடிய இரகசியமாகும்! அவரைச் சந்தித்துத் தன் குறைகளைக் கொட்டினார், அருமை நாயகம். கவனமாகக் கேட்ட துரைசிங்கம் மூக்கைச் சொரியலானார்! மூக்கைச் சொரிய ஆரம்பித்துவிட்டால் அவருடைய மூளை வெகு வேகமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டதென்று நாம் பொருள் கொள்ளலாம்!! "சார் இதில் என்னவோ, சூது இருக்கிறது. இருக்கட்டும். முதலில் நான் கொலை நடந்ததாகச் சொல்லப்

ஃ -தொடர் கதை- ஃ

படும் இடத்தைப்பார்க்கவேண்டும்", என்றார் துரைசிங்கம். "உங்களைப்போலத்தான் சார், சப்இன்ஸ்பெக்டர் சாந்தமூர்த்தியும் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் சந்தர்ப்ப சாட்சிகளோ, ஜானகி கொலை செய்ததாகவே இருக்கின்றன...சார்! எப்படியாவது அவளை இந்த இக்கட்டிலிருந்து விடுதலை செய்துவிட்டால், உங்களைக் கையெடுத்து ஒவ்வொரு நாளும் கும்பிடுவேன். அவன் மீது கொண்ட ஆசையால் என் மகள் இளைத்துத் துரும்பாய்ப்போகிறாள். பெற்ற மனம் எரிகிறது சார்! பேதைப் பெண்! இச்சிரமை பிடித்ததுபோல் அவளிருப்பதைப் பார்த்தால், ஜானகிப் பயலுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அப்படியே உயிரை விட்டுவிட்டாலும் விடுவாள், சார்!!" என்று ஓவென்று கதறலானார், அருமைநாயகம். அவருடைய முதுகில் தட்டி கொடுத்து, 'நீங்க ஒண்ணும் கவலைப்படவேண்டாம்! நான் பார்க்கிறேன். முதலில், கொலை நடந்த இடத்துக்குப் போவோம்," என்று கிளம்பினார் துரைசிங்கம்.

போலீசாரின் ஆராய்ச்சிகள் முடிந்த பிறகு ஜானகியின் பங்களா பூட்டப்பட்டுச் சாவி, சித்தப்பா சிவலிங்கம் வசம் சேர்க்கப்பட்டிருந்தது அவரிடம் போய்ச் சாவியை வாங்கிக்கொண்டு துரைசிங்கத்தை அந்தப் பங்களாவுக்கு அழைத்துப்போனார், அருமைநாயகம். ஆடம்பரமான கூடத்துக்குள் இருவரும் நுழைந்தனர். யாரும் குடியில்லாததால் தூசுகள் நிறைந்து கிடந்தன. அங்கேயிருந்து நேரே படிகளில் ஏறிச்சென்றால் ஜானகியின் அறைக்குப் போகலாம். "நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருங்கள். நான் போய்த் தனியாக எல்லாவற்றையும் பரிசோதிக்க வேண்டும்", என்று ஜானகியின் சாவிக்கொத்தோடு அறைக்குள் நுழைந்து தாழ்ப்பாள் போட்டுக் கொண்டுவிட்டார், துரைசிங்கம்.

கூடத்திலிருந்த சோபாவில் சாய்ந்த அருமை நாயகம் மனக் கண் முன்பு, என்னென்னவோ

அண்ணல்

நினைவுகள் வந்தன. தனியாக அந்த இடத்தில் உட்கார்ந்திருக்க அவருக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. பெரிய மிலிடரி காண்டிராக்டராகயிருந்தவரே ஒழிய, அருமைநாயகத்துக்குப் பேய் பூதம் பிசாசுகள் என்றால் மிகவும் பயம்! இறந்துபோன கமல நாதனின் ஆவி, இந்தப் பங்களாவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும், என்று நினைத்தார். அப்படி நினைத்ததுமே அவர் மனம் 'திக்' என்றது. ஏதேதோ யோசனைகள், இருந்தாலும் துரைசிங்கம் இருக்கிறார் என்கிற தைரியம், இருக்கவே அப்படியே சோபாவில் தூங்கி விட்டார்.

கண்விழித்துப் பார்த்தபொழுது நீண்ட நேரமானதுபோலிருந்தது, இன்னுமா துரைசிங்கம் ஆராய்கிறார் என்று அண்ணாந்து மேலே பார்க்க, மூடிக்கொண்டு போன ஜானகியின் அறைக்கதவுகள் திறந்திருந்தன. 'என்ன செய்கிறார் பார்ப்போம்!' என்று எழுந்து போனார். சந்தடி செய்யாமல் மெதுவாக எட்டிப் பார்த்தார்! இங்கேதான் கொலை நடந்தது! இங்கேதான் கொலை நடந்தது!! —என்று யாரோ, அவருடைய காதுகளில் கத்துவதுபோலிருந்தது. அறைக்குள்ளேயோ, ஆரவம் எதுவும் கேட்கவில்லை. என்ன ஆனார், துரைசிங்கம்? என்று எண்ணியதுமே, அவருக்குப் பேய் பூதம் பிசாசுகளின் ஞாபகம் வந்தது. அந்த ஞாபகம் வந்ததும், அவருடைய உடல் வியர்த்தது. இனம் தெரியாத ஒரு இடத்தில் வந்து மாட்டிக்கொண்ட பயம் இதயத்தை உலுக்கியது. தான் வந்ததோடு மட்டுமின்றி மிகவும் நல்ல மனிதரான துரைசிங்கத்தையும் கொண்டுவந்து சிக்கவைத்துவிட்டோமே என்கிற வேதனை படர்ந்தது. என்ன ஆகியிருக்கும் என்று உள்ளே போய் பார்க்கவோ, பயம் தடுத்தது. இருப்பினும், துணிச்சலை வரவழைத்துக்கொண்டு, சுற்று முற்றும் பார்த்துவிட்டு மெதுவாக எட்டிப்பார்த்தார்!

அறையின் நடுவே ஒரு படுதா போட்டு, இருபாகமாக அந்த அறை தடுக்கப்பட்டிருந்தது. படுதாவுக்கு அந்தப்பக்கமாக யாரோ இரண்டுபேர் கட்டிப் புரளுவதுபோல் அவருடைய கண்களுக்குத் தெரிந்தது. பயத்தோடு உற்றுப் பார்த்தார். படுதா, இப்படியும் அப்படியும் ஆடியது. ஏதோ பாத்திரங்களெல்லாம்கூட உருண்டன. சண்டை நடந்தால் சப்தம் போடாமலாயிருப்பார்கள்! எந்தச் சப்தமும் ஏன் வரவில்லை?- என்று ஆலோசித்தப்படி, மறுபடியும் பார்த்தார். அப்போது பூனை கிறீச்சிடுவது போல ஒரு ஒலி கேட்டது. படுதா, அசையவில்லை. பேய் பூதங்கள் கூவினால் பூனைச் சப்தம் போடுவதுபோல இருக்குமென்று கேள்விப்பட்டது, அவருக்கு நினைவுக்கு வந்தது! உள்ளே போய்ப் படுதாவை நீக்கிவிட்டுப் பார்த்தால், என்ன நடந்திருக்குமென்று, தெரிந்துகொண்டிருக்கலாம், பயத்தைப் போல மனிதனுடைய அறிவைக் கொல்லக்கூடிய பயங்கர ஆயுதம் எதுவுமில்லையே!! பயமும் குழப்பமும் வந்துவிட்டால், பார்க்குமிடந்தோறும், ஏதோ பயங்கரப் பொருள் இருப்பதாகத்தானே தோன்றும். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பது இதனாலன்றோ? அடிபட்டு ஒரு உயிர் படுதாவுக்கு அப்பால் இப்படியும் அப்படியும் முனகிக்கொண்டு உருள்வது போலிருந்தது. துரைசிங்கத்தை கமலாவின் ஆவி. ஒருவேளை கொன்றிருக்குமோ!! அய்யோ அப்படியானால் நாம்? இந்த எண்ணம் வேரூன்றியதும் ஏனங்கேயிருக்கப் போகிறார், அருமை நாயகம்! 'உயிரைக் கையால் பிடித்துக்கொண்டு' என்பார்களே அதைப்போல, இரண்டு கண்களும் மிரண்டவராய், இப்படியும் அப்படியும் பார்த்தபடியே மெதுவாக இறங்கி, வாசலைக் கண்டதும் ஒரு தாவுத்தாவி, கதவையிழுத்துக் கையிலிருந்த பூட்டைப் போட்டுப் பூட்டிவிட்டு, பறந்தார்!

கொஞ்ச தூரம் போனபிறகுதான், எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம், என்ன இருந்தாலும் நமக்காக உதவி செய்ய வந்தவரை இப்படி விட்டுவிட்டு வந்திருக்கலாமா, என்று அவர் மனசாட்சி உறுத்தியது. "சரி! சப் இன்ஸ்பெக்டர் சாந்தமூர்த்தி துணிச்சலானவர். அவருக்கு இந்தப் பேய் பூதங்களில் நம்பிக்கைக் கிடையாது. அவரிடம் போய்ச் சொல்லி அவரை அழைத்துக் கொண்டு..."

"அடப் பைத்தியக்காரா! பேய் பூதத்தில் நம்பிக்கையில்லாதவர் எப்படி உன் கூற்றை நம்புவார்? உள்ளே பிணமாகிக் கிடக்கும் துரைசிங்கத்தை அவர் பார்க்கிறார் என்று வைத்துக்கொள். வீட்டுக்குள் நீயும் அவருமாக இரண்டு பேர் மட்டும்தானே போனீர்கள்? இதைக் கேள்விப்படும் சப் இன்ஸ்பெக்டர் என்ன எண்ணுவார்! இந்த உலகத்தில் எதை நம்பமுடிகிறது. உன்மேலேயே கொலைக் குற்றம் வந்தால் அதிலும் பேர் பெற்ற துப்பறியும் துரைசிங்கம் கொலையுண்டார் என்றால், எவ்வளவு பரபரப்பு ஏற்படும்...பேயால் மாண்டார் என்றால் நம்புவார்களா'!"

மிலிடரி காண்டிராக்டர் அருமைநாயகத்துக்கு அப்போதுதான், எவ்வளவு பெரிய ஆபத்தில் நாம் சிக்கிவிட்டோம் என்பது புரிந்தது! படுதாவுக்குப் பின்புறம் என்ன நடந்தது என்று பார்த்திருக்கலாம். மூட நம்பிக்கைக்கு இரையானோர் மனம், பாழாவது இப்படித்தான். மாவீரர்களையே மடமைத் தனம் கோழையாக்கியிருக்கும்போது, அருமை நாயகம் எம்மாத்திரம்? அங்கிருந்து நழுவிய அவருடைய முகமே, மாறிப்போயிருந்தது. அப்போது யாராவது பார்த்து அதட்டினால், அவரை எளிதில் ஒரு குற்றவாளியாக்கிவிட முடியும். வீட்டுக்குப் போய்த் தன் அறைக்குள் உட்கார்ந்தார். இருப்புக்கொள்ளவில்லை. எந்த நேரம் வேண்டுமானாலும் போலீசார் தன்னைத் தேடிக்கொண்டு வரலாம் என்று எதிர்பார்த்தார். அப்படியொரு நிலை வந்துவிட்டால், அரைப் பைத்தியம்போல —நடமாடும் பிணம்போல—வாயிருந்தும் ஊமையாக—பெருமூச்சும் கண்ணீருமே தன்னுடைய துணையென்று வாழும் தன் மகளுடைய கதி என்னவது?—என்றெண்ணியபோது, ஓவென்று கதறிவிட்டார். தான் செய்த பாபங்களையெல்லாம் எண்ணிக் கதறும் கிருஸ்துவரைப் போல, உயிரோடிருந்த தன் மனைவியிடம் அடிக்கடி சண்டைபோட்டது,

(8-ம் பக்கம் பார்க்க)



என்னென்ன செய்யலாம் என் தம்பிகளே!
எடுத்து இயம்புங்கள் உம்கருத்தை—என்ருர்
அண்ணு!! கழகம்வளரக் சாளேயர் குழாம்
கருத்தைச் சொல்லிடும் காட்சிகள் பாரீர்!



"உங்கள்கருத்தே, என் கருத்து—எதாயினும்
சொல்க. கூடிப்பேசி மகிழ்வோம்! ஒருவன் முடிவுக்கு
கட்சியில்லே" -என்றுரைத்த உத்தமர் அண்ணுவின்
ஆணைப்படி, ஆங்காங்கும், குழுமினர்! கூடினர்!!







தென்னஞ்சோலே! ஆங்காங்கே சிறுசிறு கூட்டம்!
நடுவே ஆய்வாளர், அனைவர்கருத்தையும் குறிப்பெடுத்தபடி
அத்தனைக் குறிப்புகளும் அண்ணுவிடம் சேர்ந்தன
கண்டபோது, கமலம்போல்மலர்ந்தது நமது சனநாயகத்
தலைவர் முகம்!!

இத்தனைக் காட்சிகளேயும் கண்டேன்! மெய்சிலிர்த்தேன்!
திருச்சி நாதன் கம்பெனி நண்பர் பாண்டுரங்கன் (எம். சி.)
நாம்பெறும் இன்பம் இங்ஙானிலம் காணவேண்டாமோ,
நான் எடுத்துத் தருவேன் புகைப்படம் என்ருர்! தந்தார்
நன்றி







(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்ல வந்து குளறுவோருண்டு. குளவிபோல் கொட்டிவிட்டு, ஓடுவோருண்டு. காட்டாறுபோலக் கிளர்பி, அருவிநிலைக்கு வருவோருண்டு. ஆனால், நமது பேச்சாளர்களோ, தென்றல் நடையில், தேனினுமினிய சொல்லோட்டத்துடன், கொள்கை முரசொலிக்கும் வகையில் செந்தமிழைச் சிந்துகிறார்கள்! காங்கிரசிலிருக்கும் ஒரு பெரிய பேச்சாளரையும், நமது கழக அரும்புநிலைப் பேச்சாளரையும் யார் நல்ல தமிழ்ப் பேசுகிறார்கள் என்று பந்தயம் வைத்தால், நமது இளைஞரேவெல்வர். இதனாற்றான் போலும், எக்கட்சியினரும் நம்மைப்பொறாமையுடன் பாக்கின்றனர்! சந்த நடையும், சங்கப்புலமையும்சிங்க எழுச்சியும் நமது தோழர்களுக்கு வரக்காரணம் என்ன? எண்ணத்திலுள்ள தூய்மையும், தமிழ் மீதுள்ள பற்றும், தலைவராயிருப்போர் வளர்க்கும் நடையும் தான். நாகல்நடைபயில, இன்று நானிலமெங்கும மேடையேறும் குழாத்தினர் வேண்டுமானால், "அண்ணாத்துரைக்குஎன்ன தெரியும்?" என்று சொல்லலாமே ஒழிய, அந்தக் குள்ள உருவம் தமிழகத்துக்குத் தந்திருக்கும் பேச்சுநடையை, எவரும் மறுக்கார்! பேச்சிலும் எழுத்திலும் அப்பெருமானளித்த புதுமையின் மணமே, இன்று நம்மிடையில் ஏராளமான எழில் மலர்களை உருவாக்கியிருக்கிறது! அவர்தந்தசெல்வங்கள்-அவருரை கேட்டு வர்த களஞ்சியங்கள்--அவரது வழிபயிலும் சிங்கங்கள் என்பதாலேயே, பேச்சிலும் சொல்வீச்சிலும் வல்ல தோழர்கள் ஆயிரத்துக்குமேலிருக்கின்றனர். நம்மிடம்!!

ஒரு விடுதலை இயக்கத்துக்கு மிகத்தேவையானவர்கள், பேச்சாளர்கள். நாடெங்கும் அவர்கள் சென்று பரப்புவதால்தான் கொள்கை பரவுகிறது. கட்சியின் இலட்சியத்தை மக்களுடைய இதயத்துக்குள்செலுத்தும் இன்றியமையாத கடமையைச் செய்பவர்கள் இவர்கள். இதனாலேயே ஒரு நல்ல வழி காட்டி, நல்ல பேச்சாளனாகயிருக்க வேண்டியுள்ளது! பேச்சால் அயர்ந்த உள்ளங்களை எழுப்பலாம். தூங்கிடும் கண்களில் துணிவைக கொண்டு வரலாம். வீழ்ந்த சமூகத்தில் விழிப்பையுண்டு பண்ணலாம். அதன் சாதனைமிகப் பெரிது!! அப்படிப்பட்ட சாதனையிலிடுபடுவோரே, ஒருகட்சிக்கு நல்ல பெயரும் கெட்ட பெயரும் கொண்டு வருகிறவர்கள். மக்கள் மனதைக் கொள்கையைச் சொல்லி ஈர்க்கும் இவர்களின் நடை, உடை, வாழ்க்கை முறை, மேடையில் போதிக்கப்படும் சொற்கள் ஆகியவைகளை வைத்தே அக்கட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் இருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது காஞ்சிமாநகரில், காங்கிரஸ் தலைவர் அளகேசன் கர்ச்சித்த போது "என்னய்யா! இந்த தி. மு. க. ஆட்களைப் பார்த்தால் ஒவ்வொருத்தரும் பெயர் மாற்றிக் கொள்வதிலேயே இருக்கிறார்கள். என்னமோ, அன்பழகனும், அந்த அழகனும் இந்த அழகனும்' மதியழகனும், மயிரழகனும்...என்றார். அவர் சொன்ன அந்த மயிரழகன் என்ற ஒரு சொல், அவர்தரத்தை அதளபாதாளத்தில் இறக்கித் தள்ளியது! அதுமுதல், மேடையிலே அவர் எவ்வளவோ சிரமப்பட்டுப் பேசினாலும், அவரைக் கண்ணியவான் என்று ஏற்றுக் கொள்ளக் காஞ்சிமக்கள் தயாரில்லை!! ஒருசொல்தான். எனினும் அதுவே, அவரைப் பற்றி எடைபோடும்படிச் செய்து விட்டது. அவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய இடம், பொது மேடை. அங்கே ஒரு பேச்சாளன் எழுந்துநிற்கிறானென்றால், அவன் தான் அக்கட்சியின் சின்னம்! அவன் காட்டிடும் உயர்ந்த பண்பும், உன்னதநெறியுமே, அவன் பேச்சைவிட மக்களைக் கவரும் மோகனாயுதங்களாகும்!! இப்படிப்பட்ட நெறியினைப் பயின்றோராக நம்முடைய பேச்சாளர்களிருக்க வேண்டும் என்பதைக் காஞ்சி கருத்தரங்கிலே, அழகுபட எடுத்துரைத்தார் அண்ணா. இன்னா சொலாதீர்! வேண்டாத வார்த்தைகளை எறியாதீர்! தாக்கிப் பேசாதீர்! தமிழின் தரம் குறைக்காதீர்! என்று நமதருந் தோழர்களுக்கு எடுத்து ரத்த நேரத்தில், கனிவோடு அவர் சொன்ன ஒரு வாசகம் பொது வாழ்க்கையிலீடுபடுவோர் பொன்னெனப் போற்றப்பட வேண்டிய வாசகமாகும். அடக்கம் வேண்டும்! என்பதே, அந்தவாசகமாகும்

"தெரியுமா சேதி! இந்தத் தீனா மூனாக்காள் ஆளுக்கொன்றாய், கன்னா பின்னாவெனப் பேசுராங்களாம். அதனாலே, அண்ணாதுரை கூப்பிட்டு எல்லோரையும் கண்டிச்சி அனுப்பிச்சாராம்... என்று, அண்ணாவின் அறிவுரைகளைக் குறிப்பிடின், குரங்கு மனங் கொண்டோர், கூறக்கூடும். பேச்சாளர்கள் எவருக்கும் கொள்கையிலேகுழப்ப மில்லை!

அண்ணா சொல்வதையே ஆரம்பநிலைப் பேச்சாளர் வரையில் சொல்லிவிடும் தன்மையைக் காணுகிறோம். ஆனால், ஒவ்வொருவரும் நமது கொள்கையை விளக்கும்போது, சங்கீத வித்வான்களுக்கிடையே நாம்--சுருதிபேதம்—- இருப்பதுபோல, ஒருவர் பேச்சில் காரமும், இன்னொருவர் பேச்சில் கண்டிப்பும், மற்றொருவர் சொற்பொழிவில் ஆத்திரமும் கலந்து காணப்படலாம். அது தவறல்ல! ஆனால், தாக்குறைவாகப் பேசுவதே மாபெரும் தவறாகும்!!

எனக்கு பழைய நினைவு ஒன்று வருகிறது. நாமெல்லாம் திராவிட கழகமாயிருந்த காலத்தில், 'கருப்புச்சட்டைஇயக்கம்' என்று பெரியார் ஒன்றைத் துவங்கினார்கள். கூட்டத்துக்குவரும்போதும் முடிந்தால் எப்போதும் கருப்புச் சட்டையைப் போட்டுக் கொண்டு வருவதே இந்த இயக்கத்தின் கடமையென்று, அதன் நோக்கத்தை மிகக்குறுகியதாக அய்யா செய்துவிட்டார்கள். அந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட சமயத்திலே அண்ணா அவர்கள் சொன்ன ஒரு விளக்கம், மிகமிகத் தேவையானதாகும். அண்ணா சொன்னார் -- ஊருக்கு ஊருள்ள கழகத்தோழர்களில் ஒரு சில பேரே கருப்புச் சட்டை இயக்கத்தினராக இருத்தல் வேண்டும். அவர்கள், சாரணர்போல, கிராம நலன்பேணும் சேவகர்கள் போல விளங்கவேண்டும். ஒரு வீட்டுக்கு டாக்டர் வேண்டுமென்றால், கருப்புச் சட்டைத் தோழரிடம் சொன்னால் கொண்டு வருவார் என்று மக்கள் நினைக்கின்ற நிலைமை வர வேண்டும். எந்தப் பொதுக் காரியமானாலும், எந்த ஒரு தெருவில் நடக்கவேண்டியதானாலும், அந்தப் பகுதி மக்கள் கருப்புடைத் தோழரிடம் சொன்னால் நடக்குமென்று நினைக்கிற தன்மை வர வேண்டும். எல்லா கழகத்தோழர்களுக்கும் கூப்பிட்டதும் ஓடிவர ஓய்வு கிடைக்காது என்பதால், ஓய்வுள்ள ஒருசிலர் மட்டுமே இந்த நற்பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். யாராவது அழைப்பதற்குள்ள அடையாளமாக கருப்புச் சட்டை விளங்கவேண்டுமே ஒழிய கதர் அணிவது போல அது ஒரு சடங்காகிவிடக் கூடாது," என்றார். பொதுவாழ்வில் பணிபுரிய வருவோர், கொள்கையைப் பரப்புவதோடு கூட தங்களை உதாரணமாக்கிக் காட்டுவதன் மூலமும் கொள்கைக்கு உரம் தேடவேண்டும்! இப்போதும் சென்னை முதலிய பெரிய நகரங்களில் கழகங்கள—சார்பு மன்றங்களின் ஆதரவில் இரவுப் பள்ளிக்கூடம் போன்றவைகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். ஏதாவது ஒரு நல்லது கெட்டது என்றால் கழகத்தில் சொன்னால் கவனிப்பார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையை எங்கெங்கு நமது கழகம் இருக்கிறதோ அங்கெல்லாம் பெறவேண்டும்.

"தி. மு. க வா? அடாடா! அங்கே யிருக்கும் ஆட்களிடம் உள்ள அடக்கமும் அன்பும் யாருக்கு வரும்..."

"ஒரு உதவி வேண்டுமென்றேன! என்னங்க என்று எப்படி வந்து உதவினார்கள் தெரியுமா?"

"அட! என்னய்யா ஒரு ஆளுக்குக்கூட வீண்பேச்சும், குதர்க்கப் புத்தியும் இல்லையே!!"

"ஐயா என்று அவர்கள் அழைக்கும்போதே ஆனந்தமாகயிருக்கிறது..."

இப்படி நம்மைப் பற்றி நாடு பேசவேண்டும்! பொதுவாழ்க்கை என்றால் மேடையேறி, மாலை வாங்கி, மதிப்புப் பெறுவது மட்டுமல்ல; மனிதர்களாம் நடமாடும் கோயில்களுக்குச் சேவை புரிவது என்கிற உண்மையின் உதாரணங்களாக நாம விளங்கவேண்டும்!! அரசியல் வாழ்வில்; இந்த அன்பு நெறியை மட்டும் நாம் கடைப்பிடித்தால், எதிரிகள் நாணுவர். நம்மை ஏறெடுத்துப் பார்க்கத் தைரியமின்றி முகம் கோணுவர். நமது கழகங்கள் யாவும் கனி தரும் சோலையாகும்! அந்தச் சோலையை எந்த மந்திரியும் எதுவும் செய்ய முடியாத நிலையும் பிறக்கும்!!

இப்படி எல்லாக் கழகங்களையும் உருவாக்கப் பேச்சாளர்கள் உதாரணங்களாக வேண்டும், என்பதையே, "அடக்கம் வேண்டும்" என்கிற அன்புரையின் மூலம் சொன்னார்அண்ணா.

* * *

நாடு, நமக்குத் தெரியாத அளவுக்கு நம்மை ஆதரிக்கிறது! நம்மால் வாழ்வு கிடைக்கப் போகிறதென்றும் எதிர்பார்க்கிறது! கழகக் கொடியைக் கண்டால் எரிச்சல் பட்ட காலம் போய் இன்பமடைகிறது! வாழ்கப் போடத் தயாராயிருக்கிறது! இதன் பொறுப்பை நமக்கெல்லாம் நன்கு வலியுறுத்தவே, காஞ்சியில் கருத்தரங்கு நடந்தது. கண்டோம், ஆயிரத்துக்கு மேற்பட்ட பேச்சாளர்களை! கொள்கை பரப்பும் அந்தக் குணவான்களால் நமது கொள்கையோடுகூட நன்னெறியும் பரவட்டும்—சூது, தற்பெருமை, சுயநலம், இதனால் தான் பெருமை எனும் கர்வம்—எல்லாம் மறைந்து, மக்களின் தொண்டர்கள் என்கிற மனநிலை மாற்றாருக்கு ஏற்படும் வகையில் எல்லோரும் நடப்போமாக! அந்நாள் வந்திடின், அரசியல் வாழ்வில், அச்சம் நுழையாது—அடிதடியும் நடக்காது—'தப்புக் கணக்கு'ப் போட்டு தன்னுடைய மனதை அலக்கழித்துக் கொள்ளும் தன்மையும் குறையும்—பயமும் ஒழியும்—பாசமும் பரிவும் பெருகும்—நாடெல்லாம் ஓர் குடும்பமென்னும் நன்னிலை பிறக்கும்-அன்பும் கொள்கையுமே அரசாளும்! மனித யுகமும் மலரும்!!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்காரர்களைத் திட்டியது போன்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைத்து, "அந்தப் பாபந்தானோ! பரமேசா!!" என்று நொந்தார்.

மாலைவரையில், அவர் எதிர் பார்த்தபடி எந்தப் போலீசாரும் வராமற்போகவே, அவருக்கு ஒரு ஐயம் எழுந்தது. அவர் தூங்கிய பொழுது, அவரை எழுப்பாமலே துரைசிங்கம் போயிருக்கலாமல்லவா?—அப்படியானால் படுதாவுக்குப் பின்பக்கம் இரண்டு பேர் கட்டியுருண்டது போல் தெரிந்ததே, அது?—சரி எதற்கும் அவர் வீட்டைப் போய்ப்பார்த்து வருவோம் என்று, இருட்டானதும் போனார்.

வீடு சந்தடியற்று இருந்தது.

(தொடரும்)

60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வெந்த சதை! பிளந்த வாய்! உருகிய எலும்புகள்! குடலைப் புரட்டும் நாற்றம்! குன்றுபோல் பிண மலை!

என் வேலை, இவ்வளவு சிறப்பாக' நடப்பது கண்டு, ஜெர்மானியத் தலைவர்களெல்லாம் சிந்தை மகிழ்ந்தனர். 'விந்தை மனிதனப்பா ஈச்மென்! அங்கேரியிலிருந்து எத்தனை ஆயிரம் யூதர்களை, எப்படியோ ஓட்டிவந்துவிட்டான்!' என்று புகழ்ந்தனர். எனக்குக்கூட "யூதர்கள் பிரச்னையை தீர்க்கவே நாம் பிறந்திருக்கிறோம்" என்கிற தற்பெருமையும் ஏற்பட்டது. இந்தச் சமயம் யூதர்களோடு, நான் ஒரு 'பேரம்' நடத்தினேன்! அங்கேரியிலிருந்த மீதி யூதர்களைப் பார்த்து "பத்தாயிரம் மிலிடரி டிரக்குகள், கொடுத்தால் பத்து லட்சம் யூதர்களை விடுவிப்பதாக"ச் சொன்னேன். இப்படிச் சொல்லும்படி, ஹிம்ளர் தெரிவித்தார். இதற்குக் காரணமுமில்லாமலில்லை! தொடர்ந்து போர், போர் என்று போரிலேயே மூழ்கிக் கிடந்த ஜெர்மானிக்கு, போரைச் சமாளிப்பதற்கான ஆயுதங்கள் தேவைப்பட்டன. நாங்கள் கைப்பற்றிய யூதர்களின் பாங்கிகளும், வட்டிக் கடைகளும், சொத்துக்களும், நகைகளும் பணமாக்கப்பட்டு போருக்குப் பயன் படுத்தப்பட்டன. அதனால்தான், இறந்த யூதனின் வாயிலிருந்தத் தங்கப் பற்களைக்கூட விடாமல் பிடுங்கினோம் எனினும், போர் என்றால் சாமான்யமா? வெறும் போர் முழக்கத்தால் மட்டுமே, எமது வீரர்களைச் சமாதானப்படுத்திவிட முடியுமா!

மாதம் முடிந்தால் ஒவ்வொருவருக்கும் சம்பளம் கொடுக்கவேண்டும்—அதிலும் டாக்டர்கள், விஞ்ஞானிகள், என்சினீயர்கள் என்று எத்தனை விதம்—யாவரும் ஜெர்மானியர் என்றாலும், அத் தேசிய உணர்ச்சி மட்டும் போதுமா போரை நடத்த? இந்த நெருக்கடியோடு, யூதர்களைக் கொண்டுவந்து அடைக்கவும்—அவர்களைத் தீர்த்துக் கட்டுவதற்கும், ஏராளமான பணம் செலவழிந்து கொண்டிருந்தது. பல யூதர்களை, இதனால்தான், "சாகப் போகிறவனுக்குச் சாப்பாடு எதற்கு?" என்று பட்டினி போட்டோம்- பலன், கொஞ்சம்தானே கிட்டமுடியும் இதனால்!

அதட்டி, மிரட்டி, எங்களால் ஆரம்பகாலத்தில் யூதர்களிடம் எல்லாவற்றையும் பிடுங்க முடிந்தது. வெளி நாடுகளுக்கு அனுப்புவதாகச் சொல்லி, ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் யூதர்களை அப்புறப் படுத்தும் வேலையில் நாங்கள் ஈடுபட்டதும், பலர் தமது உண்மையான சொத்துக்களைப் பதுக்க ஆரம்பித்தனர். வெளி நாட்டுக்குப் போனதும் என்றாவது ஒரு நாள் போர் நின்றதும், இதைத் திரும்பப் பெறலாம் என்பது அவர்கள் ஆசை. அவர்கள் கண்டார்களா, நேரே சாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம், என்கிற உண்மையை!!

அங்கேரியில் மட்டுமின்றி நாங்கள் கைப்பற்றிய நாடுகளில், 'ஆஸ்ட்விச்' சுக்குக் கொண்டு வரும் நிலையில் மிச்சமிருந்த எல்லா யூதர்களுக்கும் இந்தப் பேரத்தை அறிவித்தோம். இந்தச் சமயம்தான் அமெரிக்கத் தலைவரான ரூஸ்வெல்ட், நாங்கள் யூதர்களைத் தீர்க்துக்கட்டும் கொடுமையை எப்படியோ அறிந்து, கண்டனக் குரல் எழுப்பினார். யூதர்களுடைய உலகச் சங்கமும ஓவென்றலறியது. உடனே, நாங்கள், எங்களுடைய நிபந்தனையை அந்த உலகச் சங்கத்துக்கு அறிவித்தோம், "பதினாயிரம் டிரக்குகளுக்குப் பத்து லட்சம் யூதர்கள்" என்பதாக.

இந்த மிலிடரி டிரக்குகளைக் கொண்டு ரஷியர்களை மட்டுமே தாக்குவோம் என்று உறுதியும் சொன்னோம். இந்த "உதவி"யை பெற்று, அதைக் கொண்டே யூதர்களை வேகமாக ஒழிக்க முயன்றாலும் முயல்வோம் என்கிற ஐயப்பாட்டைப் போக்க பல முறை நான் உறுதி மொழிகள் தந்தேன்! உடனடியாக 'ஆஸ்ட்விச்" நிறுத்தப்படும் என்றும் அறிவித்தேன்!!

புடாபெஸ்ட் நகரில் டாக்டர் ருடால்ப் காஸ்ட்னர் என்றொரு யூதர் இருந்தார். இவர், அங்கேரி யூதர்களின் தலைவர். அவருடன் இதுபற்றி பேசினேன். மிகவும் நல்ல ஆள்! அவர் மட்டும் ஜெர்மானியராக இருந்தால் எங்கள் இராணுவத்தில் பெரிய அதிகாரியாக இருந்திருக்கலாம். அவருடன் நான் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த சமயம், அங்கேரிய பாசிச கட்சியான "குறுக்கு அம்பு" எனும் பெயர் கொண்ட இயக்கத்தினர், யூதர்களைத் தீர்த்துக் கட்டுவதில் எங்களைவிட முற்போக்காயிருந்தனர். இந்தப் பேரத்தை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். மிச்சமீதியிருக்கும் யூதர்களை, இஸ்ரேலுக்குக் கொண்டுபோக விரும்பினார், டாக்டர் கேஸ்ட்னர். வயது முதிர்ந்தவர்களையோ, பயனற்றவர்களையோ அந்த டாக்டர் காக்க விரும்பவில்லை! மறுபடியும் யூதர்களை 'உற்பத்தி' செய்யக் கூடிய வலிவுள்ள வாலிபர்களையும், பெண்களையும் காப்பாற்றவே அவர் துடித்தார்! மிக நல்ல மனிதன்! என் லட்சியத்தில் எனக்கு எவ்வளவு ஆர்வமிருந்ததோ, அதேபோல அவருடைய இலட்சியத்தில் அவருக்கு அவசரமும்—வேகமும் இருந்தது. அதனால், "மிஸ்டர் ஈச்மென்! வேண்டுமானால், அந்தக் கூட்டம் உங்கள் கட்டளைப்படி ரயில் ஏறட்டும். இதை என்னிடம் விடுங்கள்," என்று அடிக்கடிச் சொல்வார். நானும் ஏதோ ஒரு நூறு அல்லது ஒருசில ஆயிரம் யூதர்கள் பிழைத்துப் போவதை ஒரு பெரிய சேதியாக, எண்ணவில்லை!!

கர்ட்பெச்சர் என்பவன், எங்கள் நிதி இலாகா ஆள். அவன் மூலம் ஹிம்ளர். வந்ததை வாங்கிக் கொண்டு பிழைத்துப் போக விரும்பிய யூதர்களை, விரட்டச் சொல்லியிருந்தார். எங்களுக்கு அந்நிய நாட்டுச் செலாவணியும், தேவையான பொருள்களும் வேண்டியிருந்தன. அவைகளைத் தருவோரை தப்பியோட அனுமதிக்கச் சொன்னார், ஹிம்ளர். ஒரு தடவை, பெச்சர் என்னிடம் ஒரு தங்க நெக்லசைக் காட்டினான்! ஹிம்ளருடைய காதலிக்காகக் கொண்டு போவதாகச் சொன்னான்!! இப்படி, ஒருபக்கம் சந்தடி சாக்கில் சுருட்டப்பட்டது. ஆனால், நான் இதில், எதிலும் தலையிடவில்லை. இவனைச் சரிக்கட்டி 700 யூத வாலிபர்களை அழைத்துக்கொண்டு வெளியேற டாக்டர் காஸ்ட்னர், அனுமதி பெற்றார்...

இப்படிப் பலர் தப்ப அனுமதித்தோம்! காஸ்ட்னர் சொல்லுகிற இடத்தில், கும்பலாக ஒருசில யூதர்களை வைத்திருப்போம். அவர்களை எவ்வித ஆபத்துமின்றி, எல்லையை விட்டுப் போகும்படி அனுமதிப்போம். இரவில்தான், இது நடக்கும். இதற்கு "பெரிய மனிதர்கள் ஒப்பந்தம்" என்று பெயர். இப்படி அனுமதிக்கப் பட்ட யூதர்கள், அண்டை நாடுகளுக்குள் பதுங்கி இஸ்ரேலுக்குச் சமயம் பார்த்துச் செல்வார்கள். இஸ்ரேலில் அப்போதிருந்த பிரிட்டிஷார், வெளியிலிருந்து யூதர்கள் வருவதைத் தடுத்ததால், அங்கும் இவர்கள் வெகு சாமர்த்தியமாகத்தான் நுழைய வேண்டும். (நாம் பணத்தை வாங்கிக்கொண்டு போகவிடுவோம்! இஸ்ரேலுக்குள் நுழைந்தால், இருக்கவேயிருக்கின்றனர் பிரிட்டிஷார்—சுட்டுப்போட!!—என்ற கருத்தில்தான், இந்தக் காதகன், சம்மதித்திருப்பான். ஆ—ர்) இதெல்லாம் ஹிம்ளருடைய கட்டளைப்படியே நடந்தது. டாக்டர் காஸ்ட்னருடன் நான் பேசுவேனே தவிர, அவர்கூட அமர்ந்து ஒரு குவளை தண்ணீர் கூடச் சாப்பிட்டறியேன். யாராவது ஒரு யூதனோடு, என்னுடைய வீரர்கள் உட்கார்ந்து சாப்பிட்டார்கள் என்றால், அவர்களுக்குக் கடும் தண்டனைகள் கொடுப்பேன்...

"10,000 டிரக்குகளைக் கொடுத்தால் பத்து லட்சம் யூதர்கள்" என்று சொன்னேனே தவிர, உண்மையில் அங்கேரியில் அவ்வளவு யூதர்கள் இல்லை. ஆஸ்ட்விச் போன்ற இடங்களில் மிச்சம் மீதியிருக்கும் யூதர்களையும் சேர்த்தால்தான் முடியும். இந்தக் கோரிக்கையை உலக யூதர்கள் சங்கம் ஒப்பியிருந்தால், இந்தப் பத்து லட்சமும் பிழைத்திருக்கக் கூடும்!!—

ஜோயல்பிராண்ட் என்றொரு அங்கேரிய யூதன் இந்த நிபந்தனையைப் பாலஸ்தீனம் (இப்போது இஸ்ரேல்!) கொண்டு செல்லும்



ஆஸ்டிரியாவிலுள்ள இந்த இடத்தில்தான் ஹிட்லருடைய படைகள் கடைசியாக இருந்தன.

படி அவரைத் தேர்ந்தெடுத்தேன். அவனை அனுப்பியும் வைத்தோம் துருக்கி அப்போது நடுநிலைமை நாடாக இருந்தது. அதன் வழியே போகச் சொன்னேன். அவர் சிரியாவுக்குள் போனபோது, பிரிட்டிஷார் பிடித்துச் சிறைப்படுத்தி விட்டனர்...யூதர்கள் எங்களைச் சந்தேகித்தனர். எங்கள் பேரத்தை ஏற்கவில்லை, அவர்கள் ...இதனால், நான், என் வேலையை நிறுத்தவில்லை. ஆஸ்ட்விச்சில் பிணங்கள் விழுந்து கொண்டேயிருந்தன. பிராண்ட், பேரத்தை முடித்துக்கொண்டு வந்து சொன்னால், ருமேனியா வழியாகவோ அல்லது பிரான்சைத் தாண்டியோ, யூதர்களை அனுப்ப நான் தயாராக இருந்தேன். பத்து லட்சம் யூதர்களையும் வரவேற்று இடம் தர பாலஸ்தீனத்துக்குச்

சிக்கல் இருந்திருக்கலாமே ஒழிய அனுப்ப நாங்கள் தயாராகவே இருந்தோம்! பத்தாயிரம் டிரக்குகள் என்றால் அச்சமயம் சாதாரணமா, எமக்கு!!

"குறுக்கு அம்பு" இயக்கத்தினர், எங்களுடைய கள்ளக்கடத்தலை அறிந்ததும் குமுறினர். இந்தச் சமயம்தான், எங்களுக்கு ரஷ்ய மண்ணில் தோல்விமேல் தோல்வி என்கிற செய்திகள் வரலாயின! நேசநாடுகளில் விமான தாக்குதல் இச்சமயம் மும்முரமாகவே, ஆஸ்ட்விச்சுக்கு வரும் வழிகள் பாதிக்கப் பட்டதால், முன்புபோல் யூதர்களைக் கொண்டுவர முடியவில்லை. 'குறுக்கு அம்பு'களோ, கொண்டு போ, தொலை, கொல்லு என்றனர். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எதிரிகள், என் வேலைக்குக் குந்தகம் விளைவிப்பது கண்டதும் குமுறி எழுந்தேன். "பாவிகளே! ரயில் ரோடுகளையும் சாதாரண பாதைகளையும் குண்டு போட்டா தூர்க்கிறீர்கள்? ஆஸ்ட்விச்சுக்கு யூதர்களைக் கொண்டு போய்க் கொல்லாமல் தடுக்கத்தானே, இப்படிச் செய்கிறீர்கள். நீங்கள் காக்க விரும்பும் யூதர்களின் கதியைப் பாருங்கள்!!" என்று எரிச்சலடைந்தேன். இதன் காரணமாக, அங்கேரியில் திரட்டப்பட்ட யூதர்களை யெல்லாம் 'நடந்து வருக' என்று கட்டளையிட்டேன். ஒரு இருபதினாயிரம் பேர், இப்படி நடத்தப்பட்டிருக்கக்கூடும். கணக்கு சரியாக கவனமில்லை எனக்கு. இவர்களை நேரே ஜெர்மனியின் எல்லைக்கு அனுப்பினேன். எல்லையோரம் வென்று வரும் ரஷ்யர்கள் நுழையாமல் தடுக்க எனது ஜெர்மானியப் பெண்டிரும் பிறரும் பெரிய பெரிய அகழிகளை அமைக்கும் பணியிலீடுபட்டிருந்தனர்! இந்த யூதர்களையும் துப்பாக்கி முனையில், அந்த வேலைக்குப் பயன்படுத்தினேன்!!

...ரஷியர்கள் முன்னேற முன்னேற அங்கேரியின் நிலைமை சீர்கெடலாயிற்று, குழப்பம் முளைவிடலாயிற்து. ரஷியர்கள், புடாபெஸ்ட்டை நெருங்கிவிட்டனர். மேஜர் ஜெனரல் ஆகஸ்டு என்பவர் வசம் நகரைப் பாதுகாக்கும் பொறுப்பு இருந்தது. அவர் என்னிடம் ஆளனுப்பினார். நான் அப்போது புடாபெஸ்டில்தான் இருந்தேன். "என்னிடமிருக்கும் நூறு துப்பாக்கிகளுக்கு மருந்தில்லையே!" என்று கதறினார். வெடிமருந்துக் கிடங்கு, பல மைல்களுக்கப்பாலிருந்தது. உடனே நான் கொண்டு போவதற்காக அடைத்து வைத்திருந்த யூதர்களை, "டேய் யூதர்களே! ஓடுங்கள் ...வரிசையாக வழிதோறும் ஒரு யூதனுக்குப் பிறகு மற்றொரு யூதனாக, நில்லுங்கள்," என்றேன். வெடிமருந்துக் கிடங்கிலிருந்து, கிடைத்த பஸ்களையும் வண்டிகளையும் ஆட்களையும் பயன்படுத்தி, ஜெனரல் ஆகஸ்டின் படைகளுக்கு அனுப்பினேன். புடாபெஸ்ட் நகரின் நடுமையத்திலிருந்து, கீழ்ப் பகுதியில் அவர் படைகளிருந்தன.

எனக்கோ, "அங்கேரியிலிருந்து கிளம்பு!" என்று மேலிடம் உத்திரவு அனுப்பவில்லை. இந்நிலையில் நான் எப்படி ஜெர்மனிக்குப் போகமுடியும்? என்னைச் சந்தித்து, தாக்குப் பிடிக்க முடியாது என்கிறார் ஆகஸ்ட். கிருஸ்துமஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. "மிஸ்டர் ஜெனரல்! என்னிடம் ஒரு பிரிவு வீரர்களைக் கொடும். அவர்களை வைத்துக்கொண்டு, புத்தாண்டு முதல் நாள் வரையில் நான் சமாளித்துக் கொள்கிறேன்" என்றேன். இத்தகவலை என் மேலதிகாரிகளுக்குச் சொல்ல, 1944 கிருஸ்துமசின் போது, எல்லா ஜெர்மானியர்களை வாபசாகுமாறு ஹிம்ளர் கட்டளை போட்டார்! ஜெனரல் ஆகஸ்ட், ருஷியர்களால் மாண்டார். கடைசி ஜெர்மானியனாக பிற்பகல் 3-மணிக்குப் புடாபெஸ்டை விட்டுக் கிளம்பினேன்! மேற்றிசை நோக்கி என்னுடைய 'மெர்சிடிஸ்' கார் பறந்தது—ரஷியர்களின் குண்டு முழக்கமும், அதனால் எரியுண்ட வீடுகளும் எனக்குத் தெரிந்தன!!

ஜெர்மனி சரணாகதி அடைவதற்கு ஒருதிங்களுக்கு முன்புதான் கடைசியாக ஹிம்ளரை நான் சந்தித்தேன். எனது 'ரிபோர்ட்டை' சமர்ப்பித்தேன், "சில நல்ல யூதர்களைக் காப்பாற்றி வைப்போம் நமக்கு நல்லது. அவர்கள், நம்மைப்பற்றி நல்லதைச் சொல்வார்கள்," என்றார் ஹிம்ளர். அவருக்கு, என்ன வரும் எதிர்காலத்தில் என்பது புரிந்தது. இப்படி நாங்கள் பேசிக்கொண்டது 1945-ம் ஆண்டு ஏப்ரல் மத்தியில் என்னை பிரேக்குக்கு அனுப்பினார்கள். பிரேக்கில் இருக்கும் போதுதான், "பெர்லின் வீழ்ந்தது!" எனும் நெஞ்சு பிளக்கும் செய்தி கிடைத்தது.

என் மேலதிகாரியான கால்டன் பிரன்னரைச் சந்தித்தேன். ஆஸ்ட்ரியன் ஆல்ப்ஸ் மலையோரமுள்ள கோடைக்கால வாச நிலையமான ஆல்டாசீக்குப் போகும்படி அவர் கட்டளையிட்டார். மே மாதம் முதல் வாரம் நான் அங்கு சேர்ந்தேன்! அங்கே ஓரிடத்தில் கால்டன் பிரன்னர், எனக்கு முன்பே போய்த் தங்கியிருந்தார். அவருடைய பார்வையில் சோகம் கலந்திருந்தது! "போய்விட்டது", என்று பெருமூச்சுவிட்டார்!! "என்ன செய்யப்போகிறாய்?", என்று என்னை அவர் கேட்டார். 'லாசர்சறுக்கு' என்று கூறப்படும் அந்த இடத்தை வெறிச்சோடிய நிலையில் பார்த்தேன். எங்கும் ஒரே வெண்மை! பனி, மே வரையில் இப்படியே இருக்கும். முன்பென்றால், அவர் கட்டளைகள் தான் இடுவார். இப்போதோ கடுமை இல்லை, குரலில். காலம் நெருங்கிக் கொண்டிருந்தது எங்களுக்கு. கனிவும் வந்துவிட்டது! பாதி உயிர் போய்விட்ட நிலை. இப்போதோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ, என்கின்ற நிலைமை எந்த ஜெர்மனியைக் கட்டினோமோ, காத்தோமோ, அந்த ஜெர்மனி சாய்ந்து விட்டது எங்களது நாஜீசம் நசித்தது! நாங்கள் தோற்றோம்! என்ன பதில் சொல்ல முடியும் நான்? "நான், மலையைநோக்கிப் போக இருக்கிறேன்," என்றேன், பெருமூச்சோடு. அப்போது அவர் சொன்னார், "ஆமாம்! போ. அது தான் ஹிம்ளருக்கும் நல்லது. ஐசனோவருடன் [அப்போது ஐசனோவர், அமெரிக்கப்படையின் சார்பில் நேச நாடுகளின் தளபதியாயிருந்தார்) பயப்படாமல், சமரசம் பற்றிப் பேச முடியும். ஈச்மென் மலையோரம் இருக்கிறார் என்றால், ஹிம்ளருக்கு தைரியமாயிருக்கும். சரியாக என்னிடம் நடந்தால்தான், ஈச்மென் சரணாகதி அடைவான்; இல்லாவிடில் அவன் போர் நடத்துவான் என்று மிரட்ட உதவியாயிருக்கும்," என்பதாக நான், விடைகேட்டேன். தலையசைத்தார் அவர்' கண்கள் பூமியை நோக்கின! கண்ணீர்க் கண்களைப் பார்க்கவேண்டாமென விரைந்தேன்.........அல்டாசீயில் கிடைத்த தளவாடங்களை யெல்லாம் ஒன்று விடாமல் சேல்ர்தேன். அந்த மலையிலிருதத் நகரத்துக்குமேல், உச்சியில், ந்ரு தளம் அமைத்துக்கொண்டேன். என்னுடன் வந்த வீரர்களை வைத்துக்கொண்டேன். சில டிரக்குகள் இருந்தன. போதுமானதுணிமணிகள் இல்லை. சில நாணயங்களும், தங்கங்களுமே இருந்தன, அந்த டிரக்குகளில்...அல்டாசீயிலிருந்து ப்ளா-ஆல்ம் என்கிற இடத்துக்குப்போய்விடலாமென்று எண்ணினேன். இது இன்னும் கொஞ்சம் பாதுகாப்பான இடம். ஆனால் திடீரென கடும் பனி கொட்ட ஆரம்பித்தது! "ஹிட்ளர் யூத்" என்று சொல்லப்படுகிற வீர வாலிபர் 150 பேர் என்னிடமிருந்தனர். அவர்கள் பனிகளை வெட்டினர். பாதை அமைத்தனர். ப்ளா ஆமில் ஒரே ஒரு ஓட்டல்தான் இருந்தது. அங்கே ஒரு அறையை வாடகை பேசிக்கொண்டு, உடைகளையும் ஆயுதங்களையும் வைத்தேன். அல்டாசீயிலிருந்த எங்கள் பழைய நாஜிக் கட்சித்தொண்டர் ஒருவர், இந்த ஓட்டல் காரனைப்பற்றி எச்சரித்தார். ஏதாவது முரண்டினால், தீர்த்துக்கட்டுவது என்றே இருந்தேன். அந்நிலை, ஏற்படவில்லை. என்னுடைய வீரர்கள் எங்கோ போய் ஒரு பீப்பாய் "பீர்பானத்தை"க்கொணர்ந்தனர். வெளியே வீதியில் வைத்து. ஒவ்வொருவராய் மொண்டுகொண்டு நகரச் செய்தேன். பீப்பாய், காலி! அது முடிந்ததும், மலையுச்சிக்கு நடந்தோம். அப்போதுதான், ஒரு ஆள் வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்தான். ஒரு 'உத்திரவைக் கொடுத்தான், கால்டன் பிரன்னர், கொடுத்ததாக ', ஒரு பெட்டி நிறைய உணவுப் பொருள்களைக் கொடுத்து அவனை சுவிட்சர்லாந்துக்கு விட அனுமதிக்குமாறு, கால்டன் பிரன்னர் எழுதியிருந்தார். அவன் போன நாலைந்து நிமிடங்களுக்கெல்லாம் அவர் கொடுத்ததாக ஒரு துண்டுக் காகிதத்துடன் இன்னொருவன் வந்தான்.

—தொடரும்

"டிரக்குகளைக் கொடுத்தால் யூதர்களுக்கு விடுதலை!" என்று ஈச்மென் ஆர்ப்பாட்டம் செய்தபோது, அப்படியாவது நம்மவர்களைக் காப்போம் என்று ஈடுபட்ட இரண்டு யூதர்களில் ஒருவர் டாக்டர் பாஸ்ட்னர், மற்றொருவர் பிராண்ட்...

பிராண்ட் இப்போது இஸ்ரேலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஈச்மென் பேரம் பேச இவரை அனுப்பியபோது, பிரிட்டிஷார் பிடித்து கெய்ரோவில், சிறை வைத்தனர்...1955-ல் டாக்டர் காஸ்ட்னர் இஸ்ரேலியப் பார்லிமெண்டுக்குப் போட்டிபோட்ட போது, ஈச்மென்னுடன் உறவாடிய ஆள் என்று கடுமையாக எதிர்க்கப்பட்டார். இரண்டு முறை இவர்மீது வழக்குகள் போடப்பட்டு நான்காண்டுகள் நடந்து கடைசியில் இஸ்ரேலியப் பார்லிமெண்டு இவரைக் குற்றமற்றவர் என்று கூறியது.

இந்தத் தீர்ப்புக் கிடைப்பதற்கு பத்து மாதங்களுக்கு முன்பு ஆத்திரமடைந்த ஒரு யூதன் இவரை இஸ்ரேலியத் தலைநகரான டெல்அவீவில் சுட்டுக் கொன்றான்!

* * *

டாக்டர் காஸ்ட்னர்.

பிராண்ட்

2-ம் பக்கம் தொடர்ச்சி

தான் அவர்களின் தலையாயபணி. எல்லோரும் உணர்கின்றஒன்றை எதிர்பார்க்கும் ஒன்றை இசைநய மிக்கமொழியியல்எடுத்துச்சொல்வதுதான் அவர்களுக்குக் கைவந்த கலை. அவர்கள் எதனையும் போதிக்கும் பேராசிரியர்களல்ல; அனுபவத்தில் காணும் வறுமைமயமான வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கான பரிகாரம் தேடுகின்ற அறிவைப் பாமர மக்களிடம் பரப்புவதே அவர்கள் "சுபாவம்".

இத்தகு இயல்புகள் கொண்ட ஆயிரம் பேர் 17-ஆம் நாளன்று காஞ்சிக்கு வந்தார்கள் என்பதைக்காட்டிலும் அனுப்பப்பட்டார்கள் எனச் சொல்வதே சரி. எதிர்காலத்தை ஒளிமயமாக்க இந்தத் தலைமுறைக்குக் கிடைத்துள்ள ஒரே தலைவனின் அறிவுரைகளை கேட்க அழைக்கப்பட்டவர்கள் எனச் சொல்வதே சரி.

நாள் முழுவதும் நாலுபக்கங்களிலும் சுற்றித் திரிந்தாலும், பனிரெண்டு மாணவர்களும் உடனிருந்து உரையாடியே இரவுகளில் உணவுண்ண விரும்பிய ஏசுகிருஸ்துவைப் போல, ஆண்டுக் கணக்காக-மாதக்கணக்காக நாட்டின் மூலைமுடுக்குகளில் சுற்றித் திரிந்து சூருவளிப் பணியாற்றும் தோழர்களை "இரண்டொரு நாட்களாவது என்னுடன் இருங்கள்-கலந்துரையாடுங்கள்" எனக் கழகத் தோழர்களைக் கேட்டுக் கொண்டார், அண்ணா.

அண்ணா ஒருவருடன்கலந்துரையாட ஆயிரம்பேர். அந்த ஆயிரம் பேரோ அன்றுடம் சந்தித்துக் கலந்துரையாடும் மக்கள் இலட்சம்பேர்-கோடி மனிதர்கள் !

அண்ணா ஒருவரே கோடி மக்களாக இருக்கிறாரா ? கோடி மக்களும் அண்ணா ஒருவராகவே ஆகிவிட்டார்களா ? இந்தப் புதிரை விடுவிக்கும் வேலையை சரித்திரக்காரரிடம் ஒப்படைத்து விட்டு, வருவோர்க்கு வசதி செய்வதில் கவனஞ் செலுத்தினர், காஞ்சித் தோழர் தங்கவேலர் அவர்கள். அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அவர், "தருணம் அறியும்" தங்கவேலர் மட்டுமல்ல, இந்த தரணிக்கு உரியோரின் குடும்பத்தவரும் ஆகிவிட்டார்.

கழகத்தோழர்கள் கலந்துரையாடிய தோட்டம் தனக்குச் சொந்தமென்று தங்கவேலர் பெருமை பாராட்டிக்கொண்டால், அது, நியாயமான காரணங்கள் அத்தனையும் கொண்டதாகும். "காணிநிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும்...?" என்று பாடிய பாரதி இப்போதிருந்தால், கேணியருகில் தென்னையைக் கொண்ட காணிநிலத்தை பராசக்தியிடம் கேட்டுக் காலத்தை வீணுக்க மாட்டார். காஞ்சித் தங்கவேலரிடமே "தானம்" கேட்டு விடுவார்! அவ்வளவு நெகிழ்ச்சியூட்டுவதாக அந்தத் தோட்டம் மிளிர்ந்தது, கொள்கை பரப்புவோர் கூட்டம்போன்று, சரித்திரத்தில் முன் மாதிரியாக ஏதும் இல்லாத செயல்களைச் செய்துமுடிக்க, அறிஞர் அண்ணா அவர்களுக்குப்பக்கத்தில்ஆயிரம் தங்கவேலர்கள் உறுதுணையாக நிற்கட்டும். அதுபோன்ற உறுதுணைகளை உருவானதும் தூய்மைநிரம்பியதுமான செயல்களைச் செய்யும் வகையில் செய்து வைக்க மாவட்டச் செயலாளர் சி. வி, எம். அண்ணாமலை இருக்கிறார்கள் என்ற திருப்தி இந்தத் திராவிடத்திற்கு எப்போதும் உண்டு. தங்கவேலர் தென்னந் தோட்டத்தைக் கொடுத்தாரென்றால், அந்தக் காஞ்சி நகரத்தையே மலர்த்தோட்டம் ஆக்கிக் காட்டிவிட்டார்கள். காஞ்சி நகரக் கழகத் தோழர்கள் அந்த மலர்த் தோட்டத்தில் வாசம் பரப்பிய பூக்களாகவே மாறிவிட்டார்கள். எதிர்காலத்தில் பெயர் சொல்லிப் பாராட்டப்படவிருக்கும் ஓர் சிறப்பான செயலைச் செய்வதில் காஞ்சித் தோழர்கள் அனைவருமே பேருற்சாகம் காட்டியது திராவிடத்தின் எல்லா மூலைகளிலும் எதிரொலிக்கத் தவருது.

வெண்கலக்குரல் படைத்த தோழர் கே. டி. எஸ். மணி அவர்கள் குரலை எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரொலித்தது தோட்டம். தோழர்கள் சம்பந்தம், வெங்கடேசு, சபாபதி, முருகேசன்;... யாரைச் சொல்வது! யாரை விடுவது!! சிரிப்பதே அபூர்வமானுலும், சீரிய செயல்களைச் செய்யும் தொண்டர்களிடம் இனிய முகத்துடன் வேலைவாங்கத் தெரிந்தவர் என்பதைக் காட்டிக்கொண்டார் சபாபதி. தனது உழைப்புக்கேற்ற "மார்க்"குகளைப் பெறுவதில் காஞ்சி நகரச் செயலாளர் தோழர் மார்க்கும் தவறவில்லை, செங்கற்பட்டு மாவட்டத்துத் தோழர்கள் நகரத்துத் தொண்டர்கள் அனைவருமே உழைத்த உழைப்பு வந்திருந்த தோழர்கள் அனைவரையும் பரவசப்படுத்திற்று.

ஆயிரமாயிரம் எண்ணங்களைச் சுமந்து வந்த பிரதிநிதிகளை, முத்துப் பற்கள் தெரிய புன்முறுவல தவழ வரவேற்றுப் பேசுகிருர் நாவலர் நெடுஞ்செழியன்! கொள்கைப் பரப்புச் செயலாளரான அவர்கள் கொள்கை பரப்புவோரை வரவேற்றுப் பேசிய பேச்சே கழகத்தின் தலையாய கொள்கைகளாக மாறக்கூடியவையாகும். ஆதரவு அதிகமின்றி அரசியல் துறையில் அனுதைகளாக இருந்தபோதும் இழக்காத பண்பினை இழக்காதீர்கள் எனக் கேட்டுகொண்டபோது, "அதனை இழந்தோம் — அல்லது இழப்போம் எனச் சொன்னவன் எவன்?" எனத் தனக்குத்தானே கேட்டுக்கொள்ளாத பிரதிநிதி இல்லை.

அடுத்து கழகப் பாடகர்கள் பாடிய பாட்டுக்கள் கொள்கைப் பரபபும் பணி யேற்றிருப்போரை பரவசமூட்டி, கொள்கையின் பால் அதிகம் ஈடுபாடுகொள்ளச் செய்யத்தக்கதாக இருந்ததென்றால், அதனைக் கேட்கும் பொது மக்கள் கழகத்தின்பால் ஈர்க்கப்படுவதில் ஐயத்திற்கே இடமிருக்க முடியாது. தென்னுற்காடு மாவட்டத்தைச் சார்ந்த பாடகர் பாடிய பாட்டுகளைப்போல தற்போதைய கழக மேடைகளில் அதிகம் கேட்கமுடியவில்லை என்றாலும், நமது சமுதாய மதக் கொள்கையில் தெளிவான நிலைமை கொண்டவர்களாகவே இருக்கிறோம் என்பதை அது உணர்த்துவதாகவே இருந்தது!

அண்ணா அவர்கள் அனைவரையும் வரவழைத்த உயர்வான காரணங்களை விளக்கியும் கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் பேசிய பேச்சுக்கள் ஏசுவின் மலைச் சொற்பொழிவைத்தான் எல்லோர்க்கும் நினைவூட்டியது. "வலது கன்னத்தில் அறைந்தவனுக்கு நீங்கள் ஏன் இடது சன்னத்தைக் காட்டத் தவறுகிறீர்கள்?" "உங்களை அடித்தும் பழித்தும் பேசுபவன் என்றைக்காவது கழகத்திற்கு வரக்கூடிய அப்பாவியே என்பதை மறவாதீர்கள்!" "நீங்கள் கொள்கையைப் பரப்பவேண்டியவர்களே தவிர, கொள்கையைப் பழிப்பவனுக்கு பதில் சொல்லிக் காலங்கடத்துவதைக் கருதாதீர்கள்!"

நம்மைப் பகைப்பவனுக்கும் சேர்த்துத்தான் நாம் நமது எதிரியிடம் போராடுகிறோம் என்பதை எப்போதும நினைவில் வையுங்கள்!"

நமக்கு எதிரியாக இருப்பவர் எந்தத் தனிமனிதரும் இல்லை. பெயர் சொல்லிக் குறிப்பிடக் கூடிய யாருமே இல்லை நமக்கு எதிரி அடிமைத் தனம்—அநியா

மு. சண்முகம்

யம்! பாரபட்சம் ஆகியவைகள் இவைகளை எதிர்த்துப்போர் தொடுங்கள். எந்தத் தனிமனிதரையும் நினைவில் வையாதீர்!" இந்தப் போக்கிலே பேசிய அண்ணா அவர்கள் பேச்சினைக் காந்தியார் கேட்டிருந்தாலும் உடனே கழகத்தில் உறுப்பினராக என்ன வழி எனத் தெரிந்து கொள்ளத் துடிதுடித்திருப்பார்.

வந்திருந்த ஆயிரம் பேரும் மாவட்ட வாரியாகச் சிறு சிறு குழுக்களாக பிரிந்து சென்று ஆற்றிய பணியையும், ஆற்ற நினைக்கும் தொண்டினையும், சொல்வதற்கு ஆங்காங்கு அமர்ந்துப் பேசி எடுத்து விளக்கிய காட்சி கழகத் தோழர்களை களிப்பிலாழ்த்திற்று.

பெற்று வளர்த்த மகனுக்கு மணமுடித்தப்பின், மருமகளுடன் பேசும் மகனைக் காணும் தாயின் உள்ளத்தைப் போல், தன் உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்ததாக அண்ணா அவர்கள் இந்தக் காட்சியைக் குறிப்பிட்டுச் சொன்னுர்கள்!

12-ம் பக்கம் பார்க்க

தென்னுற்காடு மாவட்டத்தின் சார்பில் தேர்தல் நிதியாக ரூ. 15,000-த்தை கழகப் பொருளாளரிடம் சகோதரர் கருணாநிதியிடம் மகிழ்ச்சியோடு அளிக்கிருர் மாவட்டச் செயலாளர் குறிஞ்சிப்பாடி சாம்பசிவம். அருகில், தோழர் டி. வி. நாராயணசாமி.

கேள்வி பதில்

கே: காட்டிக் கொடுப்பவன், சதைப்பொதியன், மாமிசமலை, தாசானுதாசன், சோற்றுல் அடித்த பிண்டம், என்று திராவிடம் பகற்கனவு என்று சொன்னவர்களை சம்பத் பேசினுரே அன்று, இன்று அதே தடித்த வார்த்தைகளை யாருக்குச்சொல்லலாம் அண்ணலே?

தி. மா. பாஸ்கரன்
பொள்ளாச்சி

ப: தடித்த வார்த்தைகள் நமக்கு வேண்டாம் சகோதரரே! அதுவும்அவரோடேயேபோகட்டும்!

* * *

கே; அண்ணு' அண்மையில் எங்களூருக்கு அருகாமையிலுள்ள காமாட்சி புரத்தில் பேசிய பொதுவுடைமைக் கட்சித் தோழர் கே. டி. தங்கமணி தனக்கு வரும் எம். பி. சம்பளத்தில் ஒரு காசுகூடத்தான் எடுத்துக் கொளவதில்லையென்றும், அனைத்தையும் தனது கட்சியின் நிதியில் சேர்த்து விடுவதாகவும் கூறினுர். இதுபோல் தோழர் சம்பத்தும் கட்சிக்கென்று ஏதாவது கொடுத்திருக்கிறுரா?

செ. இளமதி
வேப்பம்பட்டி.

ப: எனக்குத் தெரிந்த வரையில் எதுவுமில்லை!

*

கே: அண்ணு! கடந்த ஆண்டு திருச்சி தேவர்மன்றத்தில் நகர கழகம் ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தியது. பெரியவர் எஸ். வி. லிங்கம் அவர்கட்கு நிதிதரும் பொருட்டு. அண்ணு அவர்கள் கலந்து கொண்டார்கள். நிதியும் கழகம் தந்தது. இதனைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெரியவர் புதியகட்சியில் சேர்ந்து: புண்படும் வகையில் நடந்துவருவதை நாங்கள் அறிவோம். புதிய கட்சியின் யோக்கியதையைப் பற்றி அவரைக் கேட்டால் தெரியும் என்று நீங்கள் ஒரு பதிலில் குறிப்பிட்டுள்ளீர்களே? அவர் நம்மிடம் எப்போது திரும்பிவந்தார்? இதன் விபரம் என்ன?

சு. செயராமன்
வரகனேரி நடுத்தெரு
திருச்சி.

ப: "திருப்பி" வந்தாரோ, உன்னவோ, 'முரசொலி' அலுவலகம் வந்து என்னையும் சகோதரர் மு. க. வையும் பார்த்து, நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்! புதுக்கட்சியின் யோக்கியதை, அங்குள்ள நிலைமை, அதன் போக்கு, சம்பத்தின் குணுதிசயம் ஆகியவைகளைப் பற்றியே எங்களுடன் விவாதித்தார்! 'சண்டே டைம்ஸ்' எனும்டத்திலுள்ள புதுக்கட்சியின் அலுவலகத்திலிருந்து எனக்கு வந்த சேதிகளை அவரும் ஆமோதித்தார். அதை வைத்தே சொன்னேன்! விசாரித்ததில் அன்று வந்து போனவர், மீண்டும் வந்ததாகத் தெரியவில்லை.

* * *

கே: அண்ணுர் அவர்களே! ஜின்ணு கத்தியைக் காட்டிப் பாகிஸ்தான் வாங்கினுர். அண்ணு, செருப்பைக் காட்டி திராவிட நாடு வாங்கப்பார்க்கிறுர் என்று காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் கூறினுரே, இவருக்கு எப்படித் தெரியும் நாம்தான் செருப்புக் காட்டியதாக?

கி. டி. கோவிந்தசாமி
சின்னகம்மி ம்பட்டு

ப: அவர்மீது குற்றமில்லை! அவர் போன்றுரைப் பிரச்சாரராகப் பெற்றிருக்கும் காங்கிரசை நினைத்துப் பரிதாபப் படுங்கள்!!

* * *

கே: "அறிஞரென நீ ஒப்பாய்!
ஆனல் நல்ல
அறிவுள்ள மனிதரெல்லாம்
ஒப்புகின்றுர்!
உரிமையுடன் சொல்கின்றேன்
அவர்எம் அண்ணு!
உடன்பிறந்தோர் இருந்தாலும்
அவர்தான் அண்ணு!!

இப்படி எழுதிய கவிஞர் கண்ணதாசன் இன்று அண்ணுத்துரை என்று எழுதுகிறுர்!!

ம. செகநாதன்
சூரமங்கலம்
சேலம்-5

ப: அப்படி எழுதுவதன் மூலம் 'கவலையில்லாத மனிதனுகியிருந்ததால் வந்த தொல்லைகள் தீருமென்றுல், நான் மனதார வரவேற்கிறேன்! அரசியலில் பேர் எடுக்காவிட்டாலும், குடும்பத்துக்காவது 'நல்லதந்தை'யாக விளங்கட்டும். நல்ல முறையில் வாழ்ந்தால், அதுவே, நமக்கு மெத்தமகிழ்ச்சி!!

* * *

கே: நான் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார்அவர்களுக்கு மணிவிழா நடக்கவில்லை என்று சொன்னேன். என் நண்பர் நடந்து விட்டது என்று கூறுகிறுர். எது உண்மை? நடக்கவில்லையென்றுல்,திரட்டப்பட்ட நிதி யாரிடம் இருக்கிறது?

ஆர் கிருட்டிணன்
120, சாந்தோம்.

ப: தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களை விசாரித்தேன். மணிவிழா என்பது கொண்டாடப்படவில்லையாம. கவிஞர் கண்ணதாசன் வழக்கம்போல் உயரக்கிளம்பி, பிறகு படுத்து விட்டதால், ஒரு நல்ல காரியம் செய்த பெயரை எடுக்கத் தவறினுர். திரட்டப்பட்ட நிதி, அப்போதைக்கப்போது, அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் அதிகமில்லை. தாங்கள் எண்ணுவதுபோல் அந்நிதி கவிஞர்கண்ணதாசனிடம்இல்லையென்று அம்மையார் சொன்னுர்கள்.

* * *

கே. தங்களைப்பற்றி தன் ஏட்டில் கண்ணதாசன் எழுதியிருந்ததைக் கண்டீர்களா?

பெரியசாமி
ஊத்துக்குளி.

ப: கண்டேன் அவரது பகுத்தறிவையும் நல்ல மனதையும் பாராட்டினேன்!! என்னைப் பற்றி அவர் என்ன எழுதியிருக்கிறுரோ இதே வாசகங்களைத் தான் இன்று புகழ்பெற்று விளங்கும் ஒரு டைரக்டரைப் பற்றியும் ஏழெட்டாண்டுகளுக்கு முன்பு சொன்னுர். இன்று, அவரை, அவரே பாராட்டுகிறுர். எனினும், தான் தொட்டதெல்லாம் மணப்பதாக அவர் துணிந்து சொல்லுவதற்காக ஆச்சரியப் படுகிறேன். ஆனுலும், தொட்டதையெல்லாம் 'இடைவெளியில் விட்டுவிடாமல் நிரந்தரமாகப் பாதுகாத்துப் பலனும் பெற்று அவர் வாழ்ந்தால், என்னைத் திரையுலகுக்கு அழைத்துப் போன முதல் நண்பர் என்பதற்காக அவரிடம் எனக்குள்ள 'நன்றி'யின் காரணமாக, மிகவும் மகிழ்வேன்!!

கே: ஒரு அரசியல் தலைவரான அண்ணு, சினிமாவுக்குக் கதை எழுதலாமா?

—சுந்தரமூர்த்தி,
திருத்துரைப்பூண்டி.

ப: "சென்சஸ்" அதிகாரிகள் அவரைப் பார்த்து உங்களுககு என்ன தொழில் என்ற கேட்டபோது 'எழுத்தாளன்' என்றே அண்ணு பதிலளித்திருக்கிறுர். எழுத்தாளர்கள் எவரும அரசியலுக்கு வரக்கூடாது என்றுல் பண்டித நேரு அவர்களே பதவி துறக்க வேண்டியதுதான். தனக்குள்ள வருமானம, தன்னுடைய எழுத்து மூலம என்று நேருவே குறிப்பிட்டுள்ளதோடு, தான் ஒரு எழுத்தாளன்—தன்னுடைய தொழிலும அதுதான் என்று உலக பேணு மன்னர்கள் மாநாடொன்றில், மனந்திறந்து வெளியிட்டிருக்கிறுர்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ச்சி பெறுவதில் யாரையும் விட அண்ணு அவர்களுக்கு முழு உரிமையும் பெருமையும் உண்டு. வந்திருந்த தோழர்களில் யாரும் தாகூர் நடத்திய சாந்திநிகேதனத்னதப் பார்த்திருக்கமுடியாது. அதனை 17-ஆம் நாள் பிற்பகலில் காஞ்சித் தங்கவேலர் தோட்டத்தில் கண்டனர்.

ஆங்காங்கு அமர்ந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட தோழர்கள் கூட்டம், உழைத்தவன் கணக்குப் பார்க்கும் கூட்டம்...உரியவர் கணக்குக் கேட்கும் குழு. கடந்த ஏழெட்டு ஆண்டுகால அரசியல் வரலாறு அவ்வளவு அலசி ஆராயப்பட்டது அந்த இடத்தில்,

நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணுநிதி, தோழர் என்.வி. நடராசன். சி.பி.சிற்றரசு, க. அன்பழகன், கே.ஏ, மதியழகன் தில்லைவில்லாளன், ஏ.கோவிந்தசாமி, ப. உ,சண்முகம்,அரங்கண்ணல், டி. கே. சீனிவாசன்,, தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் மாவட்டவாரியான குறிப்புக்கள் எடுத்தக்காட்சி' போர் முனைத் தளபதிகள் புள்ளிவிவரம் கேட்டுக் குறித்துக்கொள்வதுபோலிருந்தது-

"சந்தா விவரம்"

அதிகப்பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு செவ்வாய்கிழமைக்குள்ளும், தெரிவிக்கவும். முன்பணத்தோடு வருபவைகளே, முத்லிடம் பெறும்.

சந்தா விபரம்

* * *

ஓராண்டு	—	ரூ.	8
அரையாண்டு	—	ரூ.	4

*ஆசிரியருக்கு எழுதுவோர், அவர்பெயரிட்டும், பொறுப்பாளருக்கு எழுதுவோர், பொறுப்பாளர் அறப்போர், எனவும் ' எழுதுக.

பொறுப்பாளர் "அறப்போர்" சென்னை-24

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
... சக்கியவர்க்கி மல்லே அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6